42341

எந்தாய் வாழ்க!

# தமிழ்க் கனல்

யோகி சுத்தானந்த பாரதியார்

பாடியது

ACC-TNAC
00748
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8-FEB 1951
MADRAS
719

சுத்த நிலையம்

சென்னை

**SHUDDHA NILAYAM**
Vanguard Buildings
No. 11, 2nd Line Beach, MADRAS-1

42341

©, 1MSB, T
N51

விலை ஒரு ரூபாய்
Price Re. ONE

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 106652

உரிமை ஆசிரியருக்கே
*All rights reserved by the author.*

# முன்னுரை

தமிழ், பாரத நாட்டின் பழம் பெரும் மொழி; தமிழர் உலகின் பழங்குடி மக்கள்; தமிழகம் லெமூரியாக் காலத்திற்கு முன்பே சீரோங்கிய பழம் பதி. இந்த மூன்றும் இன்றும் இளமையுடன் வாழ்கின்றன—**தமிழ், தமிழகம், தமிழர் கூட்டம்.** ஆனால் உலகில் அவற்றிற்கு உரிய உரிமை பெருமைகளை அவை அடையவேண்டும். கலை, கல்வி, தொழில், வாணிகம், சன்மார்க்கம், யோகம்—ஆகிய எல்லாத் துறைகளிலும் தமிழகம் உலகின் முன்னணியில் இருக்கவேண்டும். தகுதியுண்டு; முயற்சி வேண்டும். செல்வம் உண்டு; ஒற்றுமை வேண்டும். ஆறாயிரம் ஆண்டுகளுக்குமேல் நாகரிகப் புகழுடன் வாழ்ந்த தமிழகம் இன்று எந்த நிலைமையில் உள்ளது? உலகில் அதன் நிலையென்ன? மதிப்பென்ன? செயலென்ன? சீரென்ன? என்பதை ஆராய்ந்தால் தமிழ் உணர்ச்சி ததும்பும். அந்த உணர்ச்சி ஒரு சக்திக் கனலாக மாறி, செயலை ஊக்கவே இந்தப் பாடல்களைப் பாடினேன். தமிழ்க் கனல் ஒவ்வொரு தமிழ் உள்ளத்திலும் தமிழ்த் துடிப்பை ஊக்குக! நாம் தமிழர், தமிழகம் நமது, தமிழர் நம்மவர், நமது நாட்டையும் மற்ற நாடுகள் போல முன்னேற்றிக் காலத்திற்கேற்ற பெருமை பெற வேண்டும் என்ற உணர்ச்சி தமிழர் உள்ளத்தில் பொங்குக!

இப்பாடல்களை அன்புடன் வெளியிட்ட சென்னை சுத்த நிலையத்தாருக்கு நன்றி.

பல்கற்றுப் பொலிவுற்றுப்
புலமைக்குப் புகழாய்
உலகத்தில் தமிழ் மக்கள்
உயர்ந்திட வேண்டும்.

எந்தாய் வாழ்க!

சுத்தானந்த பாரதி.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலை நிமிர் தமிழா! | 1 |
| 2. | எழுச்சி | 2 |
| 3. | தமிழ் அன்னை | 3 |
| 4. | எந்தாய் வாழ்க! | 4 |
| 5. | உணருங்கள் | 5 |
| 6. | விழித்தெழுந்து நில் | 6 |
| 7. | தமிழ்த் திருப்பாவை | 7 |
| 8. | தமிழ் மொழி | 10 |
| 9. | எங்கள் நாடு | 11 |
| 10. | நாங்கள் | 12 |
| 11. | காலக் குறவஞ்சி | 13 |
| 12. | வள்ளிப் பாட்டு | 16 |
| 13. | தமிழ் முழக்கம் | 18 |
| 14. | காவற்காரர் பாட்டு | 19 |
| 15. | தமிழ்ப்பயிர் வாழ்த்து | 21 |
| 16. | தமிழகம் | 22 |
| 17. | புதிய தமிழ் நாடு | 23 |
| 18. | எழுந்திரு தமிழா! | 24 |
| 19. | முன்னேறு | 25 |
| 20. | ஒவ்வொரு மூச்சையும் | 26 |
| 21. | தமிழன்பு மாலை | 27 |
| 22. | தமிழரசு | 32 |
| 23. | என்னருமைத் தமிழர்களே! | 33 |
| 24. | வா வா! | 41 |
| 25. | கடமை | 42 |
| 26. | புதுமை பெற்ற தமிழ்க் கலை | 43 |
| 27. | திருக் கொலு | 44 |
| 28. | காலைப் பாட்டு | 46 |
| 29. | தமிழனுக்கு | 47 |
| 30. | மீசை முறுக்கி | 48 |
| 31. | தமிழர் திருச் சபை | 49 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 32. | தமிழ்த் துடிப்பு | ... 50 |
| 33. | புதுமை முழக்கம் | ... 53 |
| 34. | தேன் கூடு | ... 54 |
| 35. | நம் விரதம் | ... 55 |
| 36. | பொங்கல் மங்கலம் | ... 56 |
| 37. | தமிழர் கூட்டப் பாட்டு | ... 57 |
| 38. | சொல்லும் செயலும் | ... 58 |
| 39. | வள்ளுவர் சொல்லமுதம் | ... 60 |
| 40. | கம்பன் வாழ்க! | ... 61 |
| 41. | அருட்சோதி வள்ளல் | ... 62 |
| 42. | ஆன்ம நேயம் | ... 63 |
| 43. | நாவலர் பெருமான் | ... 64 |
| 44. | நாவலர் கண்மணி | ... 64 |
| 45. | சாமிநாதர் | ... 65 |
| 46. | வீர சிதம்பரம் | ... 66 |
| 47. | பாரதியார் பெருமை | ... 67 |
| 48. | பாரதி உரு | ... 68 |
| 49. | உன்னை நினைக்கையிலே | ... 70 |
| 50. | கனவு பலித்தது | ... 71 |
| 51. | வ. வே. சு. ஐயர் | ... 72 |
| 52. | நமது ராஜாஜி | ... 73 |
| 53. | செல்வத் தொழில் | ... 74 |
| 54. | புதிய வாழ்வு | ... 75 |
| 55. | இன்பமே வாழ்க்கை | ... 76 |
| 56. | நல்லது | ... 77 |
| 57. | தமிழிசை | ... 78 |
| 58. | பொலிப் பாட்டு | ... 79 |
| 59. | ஜயக் கொடி | ... 80 |
| 60. | கவியின் சித்தி | ... 81 |
| 61. | வெற்றிப் பாட்டு | ... 83 |

MADRAS

# 1. தலை நிமிர் தமிழா!

ராகம்: அடாணு தாளம்: ரூபகம்

தலை நிமிர் தமிழா—பெற்ற
தாயின் மனம் குளிர.
மலை குலைந்தாலும்—தமிழா
மனம் குலையாதே (தலை)

வீரக் கனல் வளர்ப்போம்—தோள்
விம்மிப் புடைத்திடவே.
சூரத் துணிவொடு நில்—தமிழா
சொந்த உரிமையை வெல் (தலை)

குன்றினையும் தகர்ப் போம்—எதிர்
கூற்றினையும் குமைப்போம்.
வென்றிப் புவி புரப்போம்—நல்ல
வீறுகொள் மெய்த் தமிழா. (தலை)

ஒற்றுமைச் சங்கொலிப்போம்—தமிழா
உண்மைக் குயிர் கொடுப்போம்.
வெற்றிச் சிகரத்திலே—புகழ்
வீசக் கொடி நடுவோம். (தலை)

## 2. எழுச்சி

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

தமிழின் பெருமைகளைப் பேசுவோம்—பழந்
தமிழிற் புதியவொளி வீசுவோம்
தமிழர் ஒருகுலமாய் வாழுவோம்—இளந்
தமிழர் தமிழ்விரதம் பூணுவோம். (1)

புதிய தமிழுலகைத் தோற்றுவோம்—புவி
புகழக் கலைத்திறமை காட்டுவோம்
முதிய நலங்களெல்லாம் போற்றுவோம்—இன்று
முளைக்கும் அருஞ்சுவைகள் கூட்டுவோம். (2)

சாதிமத வேற்றுமையைப் போக்குவோம்—சுத்த
சன்மார்க்க ஒற்றுமையை ஊக்குவோம்
சோதனைசெய் இடர்களைத் தாண்டுவோம்—மனந்
துணிந்த வீரவொளி தூண்டுவோம். (3)

சுற்றியுள்ள நாடுகளை நோக்குவோம்—அங்கே
சொக்கும் புதுமைநம தாக்குவோம்
வெற்றிமுர சுலகெல்லாஞ் சாற்றுவோம்—நாம்
விண்ணுயர ஜயக்கொடி யேற்றுவோம். (4)

ஆற்றலை மறந்தின்னும் தூங்கவோ—செல்வம்
அளவற் றிருக்கப்பிச்சை வாங்கவோ?
நாற்றிசையுந் தமிழிசை நாட்டுவோம்—இங்கே
நாமும் மனிதரெனக் காட்டுவோம். (5)

# 3. தமிழ் அன்னை

ராகம் : பைரவி தாளம் : ரூபகம்

வாழ்க தமிழ் அன்னை வாழ்க தமிழ் மொழி
வானம் அளாவப் புகழ் ஓங்கி,
வாழ்க தமிழர் வளநாடு—நீடு
வாழ்க தமிழர் திரு வாழ்வு (வா)

அன்புரு வான தமிழ் அன்னை—மொழி
அரசி யான தமிழ் அன்னை
இன்பம் அளிக்கும் தமிழ் அன்னை—எங்கள்
இன்னுயி ரான தமிழ் அன்னை (வா)

நல்லறம் போற்றும் தமிழ் அன்னை—தீமை
நலியப் போர்செய் தமிழ் அன்னை
சொல்லறம் போற்றும் தமிழ் அன்னை—என்றும்
சுதந்தர மான தமிழ் அன்னை. (வா)

ஆறுகள் ஊறு மலைவளத்தாள்—இயல்
அழகு சொட்டும் பசுவளத்தாள்
வீறு மிகுந்த படைவளத்தாள்—ஞான
வித்தகர் போற்றும் கலைவளத்தாள் (வா)

உண்மைத் திருமறை ஓதிடுவாள்—சற்றும்
ஓரக மற்றவள் பாரகத்தில்
வண்மையில் வானத்தைப் போன்றிடுவாள்—தெய்வ
மாமணி மக்களை ஈன்றிடுவாள். (வா)

# 4. எந்தாய் வாழ்க !

ராகம் : சங்கராபரணம் தாளம் : ரூபகம்

எந்தாய் வாழியவே—எங்கள்
இன்னுயிர் வாழியவே !
தந்தை சக்தி சிவனருள் பெற்றெங்கள்
தாரகம் வாழியவே ! (எந்)

ஆவிக் காரமுதே—அரு
ளானந்த மானவளே,
தேவர் போற்றிடச் சீர்பெற் றொளிர்கநீ
தெய்வத் தமிழணங்கே ! (எந்)

அன்பை வளர்ப்பவளே—அறி
வான கலைமகளே,
தன்போ லேபிறர் என்றுணர் சுத்த
சமரஸங் கண்டவளே ! (எந்)

காலைச் செங்கதிர்போல்—எங்கள்
காட்சிக் கினியவளே,
வேலை சூழ்உல கெங்கும் விரிகநின்
வீரத் திருப்புகழே ! (எந்)

## 5. உணருங்கள்

ராகம் : புன்னுகவராளி                    தாளம் : ஜம்பை

உணருங்கள் உணருங்கள் அன்பர்காள்—இன்னும்
உறக்கமோ செந்தமிழ்ப் பண்பர்காள் !
தணலென வீறுகொண் டெழுமினே ?—நம்
தாய்நாட்டைக் காத்திட வருமினே.

சுரண்டிடும் கும்பலுக் கிணங்கியே—கெட்ட
சுயநல மாயத்தை வணங்கியே
அரண்டிடும் அடிமைகள் ஆவமோ—பலி
ஆடுகள் போலினிச் சாவமோ ?

வளவனும் செழியனும் சேரனும்—திரு
வள்ளுவன் கம்பனும் கீரனும்,
அழகனும் அப்பரும் வள்ளலும்—நம்
ஆன்ருேர் ; அறிகுவோம் வீரரே !

கன்னடம் ஆந்திரம் கேரளம்—தமிழ்க்
கற்பகச் சோலைக் கனிகளே
தென்னுட்டுத் தாய்மொழி நம்மதே—அருட்
செல்வக் கலைத்திரள் நம்மதே.

நடுநிலை நாட்டிட வாருங்கள்—தமிழ்
நாட்டெல்லை காத்திட வாருங்கள்
விடுதலை பெற்றுமுன் னேறுவோம்—மூ
வேந்தர் புகழினைக் கூறுவோம்.

தென்முனையிற் கொடி நாட்டுவோம்—அதைத்
திருப்பதி முடிமிசை ஏற்றுவோம்
அன்னையின் மானத்தைக் காக்கவே—வாரீர்
ஆவியை ஈகுவோம் அன்பர்காள்....

---

## 6. விழித்தெழுந்து நில்

ராகம் : மாண்ட் தாளம் : திஸ்ர ஏகம்

விழித் தெழுந்து நில் —வெற்றி என்று சொல்
விண் விளக்கென—வீறு கொண்டு நில்
அழிந் தெழுந்து நில்—அச்சப் பேயினை
ஆதரிக்க வா—தமிழா—அன்புத் தாயினை.

உண்மை பேசுவோம்—உரிமை பேசுவோம்
உழைத்து வாழுவோம்—ஒருமை சூழுவோம்
திண் மனமுண்டு—தியாகத் தீயுண்டு
தெய்வம் ஒன்றுண்டு—ஓம்—செய்க நன்மையே.

சோர்வைச் சுட்டெறி—துன்பத்தைப் பறி
சுறுசுறுப்புடன்— தோள்புடைத் தெழு
ஆர் இனியுனை—அடக்க வல்லவர்
அந்தரத்தினைப்—பூட்டும்—அசட்டுக் கொல்வர்
யார் ?

வாட்டுங் குளிரிலே—வேட்டி நெய்குவாய்
வயல்வரப்பிலே—உயிர்ப்பணி செய்குவாய்
காட்டிலே நகர்—காண நல்குவாய்
கதியிழந்துநீ—இனி—கலங்க லாகுமோ ?

பயிர் விளைத்தவர்—பசி தவிப்பதோ ?
பண் விளைத்தவர்—பரிதவிப்பதோ
மயிரெனவுனைப்—பிறர் மதிப்பதோ
வந்த அன்னியர்—உன்னை—வாரி மிதிப்பதோ?

மனித னுக்கினி—மனிதன் அடிமையோ ?
மக்கள் யாவர்க்கும்—மன்னன் கடவுளே
கனிமரத்திற்குக்—காய்க்கத் தடையுண்டோ ?
ககனராசிக்கும்-இங்கே-காவற்சிறையுண்டோ?

---

## 7. தமிழ்த் திருப்பாவை

வெள்ளி நகைப்பதுபார், வெண்சங் கொலிப்பது
கேள் !
கிள்ளை தருமொழியும் கீதக் குயிலிசையும்,
அள்ளிவருந் தென்ற லருந்தேன் மலர்களுடன்
துள்ளிவிளை யாடுதல் பார்! தும்பிஓம் சக்தியெனக்
கள்ளுண் டலம்புவபார் காதற் களிப்பூறி !
உள்ளங் குளிர உயிர்குளிர ஊன்குளிரத்
தெள்ளு தமிழென்னுந் திருவா ரமுதமய
வெள்ளத்தி லாட விரைந்தேலோ ரெம்பாவாய்! (1)

வெற்றிக் குழலூதி விரையார்பூங் காற்றுன்னை
முற்றத்தே வந்தெழுப்ப மூடிப் படுப்பாயோ ?
கற்றைக் கதிர்விரித்துக் காரிருளைக் கீண்டிரவி
யுற்ற தறியாமல் ஊமைக் கனவுகளைப்
பற்றி மயங்கிப் படுக்கையிலே மெய்யுணர்வு
செற்றுக் கிடப்பாயோ, சிற்றிடையே? சீ வெட்கம்!
கற்றுக் கலையேறிக் கற்பகம்போ லேகனிகள்
முற்றிபுல கூட்ட முயன்றேலோ ரெம்பாவாய் ! (2)

முன்னை மொழிக்கெல்லா முன்மொழியை, முத்
தமிழை,
இன்னே மொழிக்கெல்லா மினிதா மிளந்தமிழைப்
பொன்னைப்போற் போற்றிப் புதுநயங்க ளேற்றிடு
வோம்
அன்னிய மாயத் தழுந்திக் கிடக்காதே ;
சொன்னச் சுரங்கங் கரந்திருக்க வுன்மனையில்
இன்னொருவர் வீட்டி லிரந்துண்ணப் போவாயோ ?
என்னேயுன் னேழைமதான் ! எம்மொழிக்குத்
தாரகமாய்
அன்னைமொழி யோங்க அருட்பணிசெய் யெம்
பாவாய் ! (3)

தேவர் குறளாட்டித் திருவா சகஞ்சூட்டி,
மூவர் தமிழோதி, நாலாயி ரம்பாடி,
தாவடங்க ளாக ழச் சங்கத் தமிழணிந்து,
காவிய மாமணியாங் கம்ப முடிகவிழ்த்துத்
தீவினை மாற்றுந் திருமந் திரஞ்சொல்லி
ஆவி யுருக்கும் அருட்பாவா லர்ச்சித்துக்
கூவித் திருப்புகழைக் கூத்தாடித் தெண்டனிட்டுத்
தேவாதி தேவனருட் சேர்ந்திடுவோ மெம்பாவாய்!

போற்றி தமிழரசி பூவெல்லாந் தாள் பணியப்
போற்றி தமிழ்ச் செல்வம் பொன்று நவநிதியாய்ப்
போற்றி தமிழர்குலம் பொய்யா மணிவிளக்காய்ப்
போற்றி தமிழுலகம் பொன் னுலக மந்திரமாய்
ஆற்ற லறிவாண்மை யழகின்ப வூற்றாகக்
காற்றுங் கடலுங் கதிரும்போல் வாழ்வோங்கிக்
கூற்றையும் வென்று, குறைவற்றுப் பூரணனைப்
போற்றி யவனருளைப் பூண்டுய்வோ மெம்பாவாய்!

# 8. தமிழ் மொழி

ராகம் : காபி　　　　　　　　　　தாளம் : ஜம்பை

இன்ப மான சிவபிரான்
　　இனிதளித்த தமிழ் மொழி
எல்லையற்ற உலக மெல்லாம்
　　இசை பெருகி வாழ்கவே!
அன்பு தெய்வம் என்று சொல்லும்
　　அமுதமான தமிழ் மொழி
அருள் செழித்த புலவர் போற்றும்
　　பொருள் செழித்த தமிழ் மொழி.
உண்மை மிக்க கீரனார்
　　உரை வகுத்த தமிழ் மொழி
ஊக்கமுள்ள வீரர் தம்மை
　　ஆக்கு கின்ற தமிழ் மொழி.
வண்மை மிக்க பாண்டியன்
　　வளர்த்த செந் தமிழ் மொழி
வள்ளுவர் குறளைப் போல
　　வாழ்க நீடு வாழ்கவே!

## 9. எங்கள் நாடு

ராகம் : **நாட்டை** தாளம் : **ஆதி**

எங்கள் நாடே - இது-எங்கள் நாடே,
இனிய தமிழ் மணக்கும் எங்கள் நாடே.
பொங்கு நாடே-வளம்-பொங்கு நாடே,
பொன்னும் பசுமையுங் குலுங்கு நாடே. (1)

வீரர் நாடே-பர-சூரர் நாடே,
விருந்திற் சிறந்த உப காரர் நாடே.
தீரர் நாடே-திருத்-தொண்டர் நாடே,
தெய்வப் புலவர்களைக் கொண்ட நாடே. (2)

செல்வ நாடே-தொழில்-மல்கு நாடே,
தீரரைத் தந்துதவுங் கல்வி நாடே.
வில்லர் நாடே-வெற்றி-வேந்தர் நாடே,
வீறு படைத்தநல்ல மாந்தர் நாடே. (3)

சித்தர் நாடே-சீவன்-முத்தர் நாடே,
திருவாய் மொழியருளும் பக்தர் நாடே.
எத் திக்கும்-குறளிசை-ஏறு நாடே,
இன்பத் திருவாசகம் ஊறு நாடே. (4)

மங்கையர்தங்-கற்பனல்-வீசு நாடே,
மாசற்ற வாய்மையே பேசு நாடே.
எங்கும் அறம் பொருளும் பொங்கு நாடே,
எல்லாரும் ஓர்குலமென் றெண்ணு நாடே. (5)

## 10. நாங்கள்

நாங்கள் செந்தமிழ் நாட்டினர் ஆவோம்.
நானிலத்தின் பழம் பெரு மக்கள்
ஓங்கு பல்புகழ் பாரித்த நாட்டார்
உலகில் எங்கள் உரிமையைக் கேளீர்.

எங்கும் இன்பப் பசுமை குலுங்கும்
இயற்கை யின்எழில் புன்னகை வீசும்.
வங்கச் செல்வம் வளருங் கரையில்
வளருங் கைத்தொழிற் செல்வங் தரையில்.

வாக்கு மிக்க வரகவி மன்னர்,
வளர்த்த செந்தமிழ் மாலை யுடையோம்;
சேக்கிழார் இளங்கோவுடன் கம்பர்
செய்த தெய்வத் திருக்கள் உடையோம்.

புவிக் கினிய பொது நெறி தந்த
புலவர் வள்ளுவர் போந்தநன் னட்டார்
செவிக்கினிய திருவருட் பாவிற்
செழித்திடும் கலைப் பண்பு சிறந்தோம்.

வாகைமிக்க வலியநல் வீரர்
வளவர் சேரர் செழியர் எம் மன்னர்
ஈகை மிக்க இருநிதிச் செல்வர்,
இலகிடும் சமுதாயத்தில் உள்ளோம்.

எத்துணையும் இனப்பிரி வின்றி
ஏழை செல்வர் எனுங் திரிபின்றி
ஒத்த சுத்த சமரஸச் சங்கம்
உள்ளன் பால்வளர் உன்னத நாட்டார்.

## 11. காலக் குறவஞ்சி

### தமிழரசி

சங்கமிருந் துலகினிலே பொங்கிவந்த காலம்
சாய்ந்ததடீ, என்னரசுந் தேய்ந்ததடீ வஞ்சி :
செங்குட்டுவன் நெடுஞ்செழியன், * திருவளவன் முதலோர்
சேனைகொண்டென் அரியணையை ஆண்மை யுடன் காத்தார்.
இங்குவரும் அன்னியர்கள் என்னுயிரை மாய்த்தார்;
இன்னொருத்தி வந்துவிட்டாள் என்னசெய்கு வாளோ ?
கொங்குமலர்க் கண்ணருவி கொட்டுகிறேன் காணாய்.... !
குறியொன்று சொல்லடியோ, காலக்குற வஞ்சி ! (1)

### காலக் குறத்தி

நல்லகுறி சொல்லுகிறேன் கேளடியோ நங்காய் !
நாடெல்லாம் உன்னருளைத் தேடிவரும் அம்மே ;
சொல்லரசி, தொல்லரசி, தொழிலரசி யென்றே
துதித்துன்னை உலகமெலாம் மதிக்குமடி தாயே!

---

* திருவளவன், திருமாவளவன், கரிகாற் சோழன்.

எல்லையில்லா வுன்கலைகள் எங்கும்ஒளி பரவும்
எண்ணரிய கவிகளுனைப் பண்ணறியப்
புகழ்வார் ;
இல்லையுனக் கொருகுறையும் வள்ளுவனைப்
பெற்றாய் !
என்வாய்ச்சொல் மகமாயி தன் வாய்ச்சொல்
லம்மே !. (2)

காலையிலே கண்விழித்துங் கங்குலென்பார்
உண்டோ ?
கற்பகநன் னிழலிருந்துங் கவலைகொள்வா
ருண்டோ ?
மூலையிலே யொதுங்குவதேன் மூப்மகுடச் செல்வி ?
முரசதிரத் தலைநிமிர்ந்துன் அரசுரிமை
கொள்ளாய் !
சோலையிலே குயிலிசைக்கத் தோகைமயி லாட,
சொரியுமட தேனருவி, அரியதமி ழம்மே !
வேலையிலே யுன்கலங்கள் விரைந்திடநீ காண்பாய் !
வியன்பெருகும் ஆங்கிலம்போற் செயம்
பெறுவாய் அம்மே ! (3)

### தமிழரசி

தனதுரிமை நிலைநிறுத்தத் தாவிவரும் நாயும்.
தமிழுரிமைக் குயிர்வழங்காத் தமிழரினி
யுண்டோ ?
மனிதர்குலந் தோன்றியதென் மார்பினிலே
யன்றோ ?
மன்னுமருட் புலவர்பலர் என்னுடைய மைந்தர்!

பனிமலையில் வீற்றிருக்கும் பகவனருளாலே
பற்றுதுபார், பற்றுதுபார் பைந்தமிழ்த்தீ
யெங்கும் !

கனிமொழிகள் சொல்லுகின்றாய் காலக்குற வஞ்சி
கன்னித்தமிழ்க் கொழுந்தேறிக் கனலுவதைக்
காணாய்.
எங்குங்-கனலுவதைக் காணாய் ! (4)

அஞ்சுவனோ நாவரசை அடைந்தமொழிக் கரசி ?
ஆதியிலிந் நாடெனதே நீதியுல கறியும் !
துஞ்சுவனோ வேல்முருக சாமிதுணை பெற்றும்?
தூரியங்கள் கொட்டுகவென் வீரியங்கள் பேசி!
பஞ்சபூதப் படைகளுக்கும் அஞ்சியொளி வேனோ
பாரினிலென் னுரிமையினை யார்தடுக்க வல்லார்?
நெஞ்சுறுதி கொண்டெழுந்தேன், வஞ்சமற்ற
குறத்தி,
நேர்மையுள்ள வீறுகொண்டே போர்புரிவே
னின்றே ! (5)

## 12. வள்ளிப் பாட்டு

ராகம் : முகாரி                                   தாளம் : ஜம்பை

தோழி

காட்டு யானை கரும்பை விழுங்குது—வள்ளியே,
கண்ணை மூடித் தவஞ்செய்வ தேனடி—
வள்ளியே ?
கூட்டுக் கிள்ளையைப் பூனைகொண் டோடிடப்—
பார்க்குதே,
குவிந்துள் ளேயென்ன சிந்தனை கொண்டனை
—வள்ளியே (1)

வெள்ளை யானையுன் வேலி யழிக்குது—வள்ளியே,
வெறும னேகண் விழித்திருப் பாயோடி—
வள்ளியே ?
கள்ள நாய்களுன் கஞ்சியைத் தீண்டின—
வள்ளியே,
கண்டுங் காணாது போலேன் இருப்பதோ—
வள்ளியே ? (2)

கழுகு வந்துன் கறியினைக் கொத்துதே—வள்ளியே
கல்லை வீசாது கைகட்டி நிற்பாயோ—
வள்ளியே?
கழுதை மேயுதுன் காணப் புலன்களில்—
வள்ளியே,
காளை மாடு தினைப்பயிர் கௌவுது—
வள்ளியே ! (3)

மந்திக் கூட்டமுன் மாங்கனிச் சோலை—யழிக்குதே,
மாசி லாத மறக்குலந் தோன்றிய—வள்ளியே!
தந்திர நரி ஆட்டுக் கிடைமிசை—தாவுதே,
தணலும் வீரத் தமிழ்க்குலந் தோன்றிய—
வள்ளியே! (4)

வள்ளி

ராகம்: பைரவி தாளம்: ஜம்பை

பருகி யென்மனக் காதலைப் பன்னிரு—கையினல்
பற்றினன் ஞான பண்டிதன் வேலவன்—
ஷண்முகன்,
முருகனையெதிர் பார்த்துமுன் நிற்கின்றேன்
தோழியே,
முருகன் முன்னிம் மிருகங்கள் நிற்குமோ?—
தோழியே! (5)

காலைச் சோதிமுன் காரிருள் சூழுமோ—தோழியே,
கதிரைக் கண்டும் பனித்துளி நிற்குமோ—
தோழியே,
வேலைக் கண்டும் அரக்க விலங்குகள்—சாடுமோ?
'வெற்றி வேல்வெற்றி வேலெ'னச் சொல்லடி
தோழியே! (6)

## 13. தமிழ் முழக்கம்

ராகம்: செஞ்சுருட்டி. தாளம்: திரிபுடை.

வைய மெங்குந் தமிழ்முழக் கஞ்செய்ய
வாருங்கள்—ஒன்ருய்ச்—சேருங்கள்!
கைகள் செந்தமி ழாலயங் கட்டிடக்
காணுங்கள்—வெற்றி—பூணுங்கள்
தேனின் இன்னிய தெய்வத் தமிழிசை
தேறுவோம்—நலங்—கூறுவோம்
நானி லத்திலுந் தாயின் மணிக்கொடி
நாட்டுவோம்—வீரங்—காட்டுவோம் (வைய)

துங்க மான தமிழ்மொழி யாவிற்குந்
தொன்மொழி—பூவின்—முன்மொழி
தங்க மான தமிழ்மொழி நந்திருத்
தாய்மொழி—தேவர்—வாய்மொழி (வைய)

வண்டமிழர் ஒருகுலத் தோழராய்
வாழுவோம்—அன்பு—சூழுவோம்!
பண்டை நன்மையும் இற்றை நலங்களும்
பாலிப்போம்—அழு—தாலிப்போம்!
தொண்டு செய்து புதுத்தமிழ் நாட்டினைத்
தோற்றுவோம்—தாயைப்—போற்றுவோம்
எண்டிசையும் தமிழின் இசைமணம்
எட்டவே—பேரி—கொட்டுவோம்....

## 14. காவற்காரர் பாட்டு

பார தநா டெங்கி லுந்தமிழ்ப்
பயிர் வளர்ப்போமே—ஐயா
ஆரியக் கோனாரே வாரும்,
அமுதம் உண்ணலாம்—தமிழ்
அமுதம் உண்ணலாம். (1)

கம்பன் வள்ளு வன்வ ளர்த்த
கற்பகப் பயிர்,
செம்பொன் பச்சை வளமை நீடு
செழிதமிழ்ப் பயிர்—இன்பம்
பொழி தமிழ்ப் பயிர். (2)

அறிவை யூட்டி அருளை யூற்றி
அழகு செய்வோமே,
அறிவி லாத சிறுமைப் பூச்சி
அகன்று வாழ்வோமே—உண்மை
புகன்று வாழ்வோமே. (3)

ஒப்பி லாத தாயைப் போற்றி
ஒன்றுபட் டுய்வோம்—அந்தக்
கப்பற் காரி வந்து நம்மைக்
கலைக்க வொட்டோமே—நிலை
குலைக்க வொட்டோமே! 4)

இருக்கும் வயலைக் காத்து வந்தோம்
இனிய தோழரே!
செருக்கும் பிலுக்கும் செய்து—புதிய
சேடி வந்தாளே—நடனம்
ஆடி வந்தாளே! (5)

வந்த சேடி மெல்ல நிலத்தை
வசப்ப டுத்தினுள்—ஐயா,
சொந்தக் காரார் வாயில் விரலைச்
செருகி நின்ருரே—கண்ணீர்
பெருகி நின்ருரே. (6)

செந்த மிழ்க்க ரும்புத் தோட்டம்
செழிக்கும் வேளையில்—மதச்
சிந்து ரங்கள் கூட்ட மாகச்
சீறி வந்தவே—வேலி
மீறி வந்தவே! (7)

காவற்காரன் வார்த்தை—தன்னைக்
காரம் என்றனர்—ஆங்
கார மென்றனர்—சில
கோவக் காரர் செய்த மோசங்
குடி கெடுத்ததே—ஐயோ
குடி கெடுத்ததே! (8)

ஒற்று மையில் லாமல் நாட்டில்
உருக் குலைந்தோமே—ஐயோ!
பட்டப் பகலில் கட்டுக் கட்டாய்ப்
பறி கொடுத்தோமே—கரும்பைப்
பறி கொடுத்தோமே! (9)

வீர முள்ள தமிழ ரெல்லாம்
விரைந்து வாருங்கள்—சபதம்
இரைந்து வாருங்கள்!
பார் முழுதுந் தமிழ் வளர்க
பரிதி போலவே—காற்றின்
சுருதி போலவே! (10)

உற்ற வுற்ற கலைக ளெல்லாம்
உரம தாகவே—நம்மைப்
பெற்ற தாயின் பயிர் நிலத்தைப்
பெரிய தாக்குவோம்—நமக்கே
உரிய தாக்குவோம்! (11)

---

## 15. தமிழ்ப்பயிர் வாழ்த்து

(நொண்டிச் சிந்து)

வாழிய வாழியவே!—செல்வ
வளம்பெறத் தமிழ்ப்பயிர் வாழியவே
வீழுக தீவினைகள்—நலம்
விளங்குக விடுதலை துலங்குகவே
தாழுக மதவெறிகள்—சுத்த
ஸமரஸ மோங்குக விமரிசையாய்
சூழுக பேரின்பம்—வெற்றிச்
சுடர்விரிந் தோங்குக கடமைகளே! (1)

ஒற்றுமை நிலைபெறுக—நம்மை
யுலைத்திடும் பிரிவினை தளருகவே
பற்றலர் பகையொழிக—ஞானப்
பரிதியின் வொளி பரவுகவே
மற்றவர் தமைநம்போல்—நன்கு
மதித்திடும் பொதுநெறி வளருகவே
நற்றவப் பெரியவர்கள்—கண்ட
நடுநிலை மனந்தொறுங் கிளருகவே! (2)

எண்ணங்கள் புதுமைபெற—என்றும்
இந்நில வளமைகள் பொதுமைபெற
பெண்ணினம் பெருமைபெற—ஆண்
பிள்ளைகள் வீரத்தில் உறுதிபெற
மண்மக ளின்புறவே—நம்மை
வளர்த்திடுந் தாய்மனங் குளிர்ந்திடவே
உண்மையின் கதிர்பரவி—இந்த
உலகுயிர் வானமு துண்ணுகவே! (3)

## 16. தமிழகம்

அன்பு கடவுள் என்று சொல்லும்
அருமையான தமிழகம்
இன்பமே நம் வாழ்க்கை என்னும்
ஈகை மிக்க தமிழகம்
வாழ்கநம் தமிழகம்—நீடு
வாழ்க நம் தமிழகம்! (1)

தூய சிந்தை தூய செய்கை
தூயநல் அருள்மொழி—
வாய்மையே வடிவமாக
வாய்ந்த நம் தமிழகம்
வாழ்கநம் தமிழகம்—நீடு
வாழ்க நம் தமிழகம்! (2)

முதுமையான ஆன்மச் செல்வம்
முழுமையாகப் போற்றியே
புதுமை யான கலை குலுங்கப்
பொலிக நம் தமிழகம்
வாழ்க நம் தமிழகம்—நீடு
வாழ்க நம் தமிழகம். (3)

## 17. புதிய தமிழ் நாடு

புதுமை புதுமை என்று
பொலிந்து முன்னேறுகின்ற
பொதுமைத் தமிழ் நாட்டினைத்—தமிழா
போற்றிப் புகழ்ந்திடுவோம்.

சாதி மதம் பேசும்
சாக்கடைக் குப்பைகளை
வீதிவிட்டே ஒதுக்கி—தமிழா
வீரநடை போடுவோம்.

ஐயரும் இல்லையினி
ஹரிஜனும் இல்லையடா
மெய்யரின் கூட்டமடா—தமிழர்
மேன்மை நம் நாட்டமடா.

தென் குமரி முதல்
திருப்பதி மலைவரை
அன்னை நிலமென்னுவோம்—அதில் நாம்
ஆட்சி செலுத்திடுவோம்.

கல்வி தொழில் வளர்த்துக்—
கலைகள் பல வளர்த்து
வெல்வோம் உலகமெலாம்—தமிழா
வீரத் திறமையினால்.

# 18. எழுந்திரு தமிழா!

ராகம் : மோகனம் தாளம் : முத்தாளம்

சிங்க நெஞ்சத் தமிழனே
சிக்கறுத் தெழுந்து நில்
துங்க ராஜ ராஜனின்
தொல் மரபு நீயன்றோ ?

செழியர் வளவர் சேரரின்
சீர்த்தி மீளச் செயல்புரி
அழிவு செய்யும் கொடுமையாம்
அடிமைப் பேயைச் சாடிடு.

கப்ப லோட்டி உலகெலாம்
கடலை யாண்ட தமிழனே !
ஒப்பிநீயும் கூலி யாய்
ஊரைவிட்டுப் போவதோ ?

தாய்நிலத்தை வெறுமனே
தரிசுபோட்டு மற்றொரு
பேய் நிலத்தை உழுவையோ
பெருமை யிழந்து நோவையோ ?

உன்னுழைப்பிற் கொழுத்திடும்
உள்ளமற்ற அன்னியர்
அன்ன மிட்ட கைகளை
அடிமை விலங்கில் மாட்டினர்.

பாச முள்ள தமிழனே
பட்ச முள்ள தமிழனே
ரோசமுள்ள தமிழனே
ரோமஞ் சிலிர்க்க எழுந்து நில்.

ஆற்றலுக்குப் பஞ்சமோ?
அறிவி னுக்குப் பஞ்சமோ?
ஊற்றியுன் உழைப் பெலாம்
உயர்த்து தாய் நிலத்தையே!

வங்கம் பெற்ற கலையிசை
வடுகு பெற்ற செயலிசை
இங்கி லீஷின் மொழியிசை
இலக நாட்டுன் அருளிசை.

மீசை முறுக்கி எழுந்து நில்
வீரம் வீரம் என்னவே
ஓசை மிக்க தொண்டுடன்
உரிமை நாட்டு தமிழனே!

## 19. முன்னேறு

முன்னேறு முன்னேறு முத்தமிழ் வீரா
மூடிப்படுக்காதே ஓடிவா வெளியே
பொன்னேறு புகழேறு பொலிவேறு நாளும்
புதுமைகள் செய்; இந்தப் புவிபோற்றி வாழ்வாய்.

திருவோங்கக் கலையோங்க தேசத்தி லேநின்
சீரோங்கப் பேரோங்கச் செயமோங்க வா வா
ஒருமையும் பெருமையும் உரிமையும் ஓங்க
ஓயாது பாடுபட நேயனே வாவா.

நாட்டுக்கு வேண்டியதை நாட்டிலே செய்வோம்
நாடுண்ண வீடுண்ண நற்பயிர் செய்வோம்
மோட்டார் விமானம் முதல் ஊசி வரையில்
முன்னிங்கு செய்வோம் முயற்சிதரும் வெற்றி.

மாஸ்கோவும் நியூயார்க்கும் லண்டனும் செய்யும்
மாண்புள்ள புதுமைகள் காண்போமிந் நாட்டில்
வாஸ்கோ கொலம்பஸ் வளைத்தவுல கத்தில்
மறைந்திருக்கும் பூமி வெளிவரச் செய்வோம்.

மின்சக்தி, அணுசக்தி, விரிவான சக்தி
விஞ்ஞான சக்திகளை வேகமாய் ஊக்கி,
தென்சக்தி நிலையத்தைப் பொன்சக்தியாலே
தேகலோகம்போலத் திகழ்வுறச் செய்வோம்.

---

## 20. ஒவ்வொரு மூச்சையும்

ஒவ்வொரு மூச்சினையும்—செயலாக்கி
உண்மைப் பணிபுரிவோம்
துவ்விய செந்தமிழர்—வருவீர்
தொண்டுகள் செய்திடவே.

சுவைபெறுங் கலையின்-அரசைத்
துலக்குவோம் இங்கே
நவ வுலகினிலே—தமிழ்
நாடு புகழ்பெறவே,

இந்தத் தமிழகத்திற்—பிறந்தார்
என்றுந் தமிழர் என்போம்
எந்தப் பிரிவினையும்—இனி
இல்லையெனப் புகல்வோம்.

மேற்கின் கலையழகும்—கிழக்கின்
மேலான உள்ளறிவும்
வாழ்க்கையிலே பொருந்த—பேரின்ப
வனமென வளர்வோம்.

பொய்யும் பொறாமைகளும்—செருக்கும்
போட்டியிடும் உலகில்
தெய்வத்தையே பணிந்து—மனச்சாட்சி
திளைக்கத் தொண்டு செய்வோம்.

---

## 21. தமிழன்பு மாலை

தமிழே தமிழே தமிழர்க் குயிரே
அமுதே அழகே அன்பே அருளே.
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே
மங்கலம் பொலியும் மாமணி விளக்கே,
பாண்டியன் வளர்த்த பச்சிளஞ் செல்வீ,
வேண்டிய வளங்கள் ஈண்டிய திருவே
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வைகையும்
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே!
செவிக்கினி தாகிய கவிக்கனி குலுங்கும்
புவிக்கினி தாகிய புண்ணியத் தமிழே.
முருகன் மொழிந்த முழுநிறை தமிழே

அருகர் புத்தர் கிறிஸ்துவர் இஸ்லாம்
மதத்தினர் எல்லாம் துதித்தநற் றமிழே,
மதவரை கடந்த பொதுமறைத் தமிழே.
பனிவரை உச்சியிற் படாம்விரி தமிழே.
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே,
இயலிசை நாடக இயற்கைத் தமிழே
குயிலிசை கைக்கும் குரலிசைத் தமிழே.
தென்பால் அப்பன் சின்முத் திரையில்
தன்பொருள் காட்டும் தத்துவத் தமிழே,
இதயக் கடவுளை யிலக்கிய தமிழே,
பொதுநிலை நடனம் புரிபர மேசன்
காதலர் உள்ளப் போதலர் தமிழே,
மாதவன் அன்பர் ஓதிய தமிழே,
சொல்லச் சொற்சுவை சொட்டுந் தமிழே
எல்லையில் இன்பம் நல்குசெந் தமிழே.
வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழே
கொற்றவர் மணிமுடி கொண்டநற் றமிழே.

இன்றுன்

முழுமதி முகத்து முறுவலைக் காணேன்
செழுந்திருக் கையிற் செங்கோல் இல்லை
அருளிசை யிருந்தும் அறிவார் இல்லை
பொருளிசை யிருந்தும் புகட்டுவா ரில்லை.
அருஞ்சுவை யளித்தும் அருந்துவோர் இல்லை
பெருந்திரு விருந்தும் பேணுவார் இல்லை.
குடக்கிருந் தொருபுயல் குப்புறத் தள்ள,
வடக்கிருந் தொருபுயல் வாரி விழுங்கவே

தவிக்கிறாள் அன்னை புவிக்கினி தாகிய
கவிக்கடல் அமுதம் கையிற் பிடித்தே.
கொள்வார் இல்லை; கொடுப்பார் இல்லை;
எள்வார் பலர்முன் ஏங்கிநிற் கின்றாள்.

இனி

விழித்தோம் எழுந்தோம் வீரராய் நின்றேம்.
அழித்தோம் இருளை அச்சம் விடுத்தோம்.
எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவனா லயமே
என்றிப் பொதுநெறி ஒன்றிப் பொலிவோம்.
உண்மையன் புறுதி உட்பொருள் அறிவு.
வண்மை இரக்கம் மனமொழித் தூய்மை,
மாசறு காட்சி மன்னுயிர்த் தொண்டு,
தேசுறுங் கல்வி திருத்தகு முயற்சி
எங்கள் பொதுநெறி யெனப்புரிந்திடுவோம்.
சூதும் வாதும், சோர்வுந் துயரும்,
அகந்தை வெறியும் அசூயைப் பித்தமும்
கள்ளும் காமமும், கவரும் கொலையும்
துள்ளும் சுயநலச் சூதும் விட்டோம்.
தமிழன் எவனும் சத்தியம் தவறினால்,
தமிழ்மர பிற்கே தவறிழைத் தோனும்
தமிழன் எவனுந் தருமந் தவறினால்,
தமிழ்மர பிற்கே தாழ்வுசெய் தோனும்;
தமிழருக் கெல்லாம் தமிழே உயிராம்.
தமிழருக் கெல்லாந் தமிழே தவமாம்.
தமிழிசை யாலே தமிழர் இசையாம்.

தமிழர் ஒற்றுமை தமிழர் வெற்றியாம்.
வாய்மையும் தூய்மையும் வலிமையும் அறிவும்,
வளரும் கல்வி இளமையிற் கற்போம்.
கல்வி நிறைந்து, வல்லமை பெற்றே
இல்லறம் புகுந்து நல்லறங் காப்போம்.
கண்கருத் தொன்றிக் காதலர் வாழ்ந்து,
பண்புள தொழிலாற் பயனுறப் பிழைப்போம்.
அடிமைத் தொழிலை ஐயச் சிறுமையை
வெறுப்போம் தமிழர் ஒறுப்போம் இழிவை.
அன்பும் திண்பும் அறனும் போற்றி,
உழைத்துப் பிழைத்தே ஊருக் கினிதாய்ச்
சேர்ந்து வாழ்வோம் சீரிய தமிழரே.
நாட்டுப் பொருளால், வீட்டுத் தொழிலால்,
நாட்டுத் தேவையை நாட்டிலே விளைப்போம்.
நாட்டுக் குப்பை நற்பயிர்க் குரமாம்.
நாட்டுப் பஞ்சு நாட்டிற் குடையாம்.
அறிவுந் தொழிலும் அறமெனப் போற்றி,
வறுமை மடமை வராது காப்போம்.
தமிழன் பசிக்கத் தமிழர் புசியோம்.
தமிழன் வருந்தத் தமிழர் சகியோம்.
புவித்தாய் தருவதைப் பொதுவுறப் புசிப்போம்.
தவத்தால் இன்பந் தழைத்திட வாழ்வோம்.
கல்லா தவரே இல்லையென் றாக்குவோம்.
எல்லா ருக்கும் நல்லது செய்வோம்.
அகத்திற் கொருமொழி சகத்திற் கொருமொழி
வகுத்துப் பயின்று வளர்ப்போம் கலையே.

பன்மொழிப் புலவர் பன்மொழிப் பயனைத்
தென்மொழி வளரத் திருவுடன் உதவுக.
எக்கலை யாளரும் அக்கலை மிக்குச்
சொக்கத் தமிழையே சுடர்ப்பொன் ஞக்குக.
கடவுட் புலவரைக் கண்ணெனப் போற்றுவோம்.
பாவலர், நாவலர், பௌதிகப் புலவர்
ஓவியர் பாடகர் ஒண்கலை வாணர்
ஐந்துலோ கத்தும் அருந்தொழில் ஆற்றுவோர்,
யந்திரம் வல்லார், தந்திரந் தெரிந்தோர்,
வள்ளற் செல்வர் வாய்மைத் தொண்டர்,
அனைவரும் வருகவே; அருட்பணி செய்வோம்.
தமிழ் இனி தோங்குக தமிழ்உல காளுக.
தமிழிசை முரசம் தாவிவிண் ணெழுகவே.
தமிழ்க்கொடி மீது தண்ணவன் உறைகவே.
தமிழ்த்தாய் முடிமேல் தாரகை விளங்குக.
தமிழகம் உலகத் தாயகம் ஆகுக.
தமிழ்மொழி உலகத் தாய்மொழி யாகுக.
விழிமின் எழுமின் உழைமின் உயர்மின்
செழிமின் உலகிற் செந்தமி ழீரே.
தமிழர் சக்தி தமிழைப் போற்றுக.
தமிழர் செல்வம் தமிழரைப் போற்றுக.
தமிழே எனது தாரகத் தாய்மொழி;
தமிழர் அனைவரும் சமரஸக் குடும்பம்.
தமிழுல கெனது தங்கக் கோயில்.
தமிழ்ப்பணி யெனது சலியா மூச்சு.
தமிழின் விளக்கமே தமியேன் பேச்சாம்.

தமிழ்த்தாய் எனது சக்தித் தெய்வம்.
தமிழ்உணர் வேயென் தளராப் பூசனை.
எந்தாய் வாழ்க மந்திரம் எனக்கே.
இப்படி ஒவ்வோர் இதயமுந் துடிக்கவே
அன்புத் தெய்வம் அருளுக நன்றே
ஆற்றல் பெறுவோம்; ஆள்வோம் உலகை
தளரா துழைப்போம் தலைநிமிர் தமிழா.
வானுற ஓங்கி வளர்க தமிழிசை
மானிடத் தேவர் வழுத்துக தமிழை.
வானைப் புவியில் வளர்த்த கற்பகம்
தேனினும் இன்னிய செந்தமிழ்க் கலையே.
முன்னிசை யுடனே பின்னிசை யோங்கி,
இன்னும் இன்னும் இசைபெற வாழ்கவே.

---

## 22. தமிழரசு

அமைதியான தமிழகத்தில்
அரசு நாட்டுவோம்
அறமும் பொருளும் இன்ப வாழ்வும்
அமைத்துக் காட்டுவோம் (அ)

அறிந்த மக்கள் அன்புரிமை
அதனை ஆளுமே
செறிந்த மக்கள் ஒற்றுமையே
சேனை யாகுமே. (அ)

புலவர் வீரர் வணிகர் தொண்டர்
பொலியத் தொழிலினல்
இலகு கல்வி செல்வ மோங்கும்
எங்கள் அரசிதே. (அ)

கண்ணைப்போல உயிரைப்போலக்
காவல் செய்குவோம்
விண்ணைப்போல விளங்குந் தமிழின்
வீரக் கொடியினை. (அ)

பகை நடுங்கப் படை நடந்து
பலம் பெருகவே.
தொகை மிகுந்து வகை மிகுந்து
துலங்க வெற்றியே. (அ)

---

## 23. என்னருமைத் தமிழர்களே!

### 1. எழுந்து வாரீர்!

என்னருமைத் தமிழர்களே யினிது வாரீர்;
எல்லாரும் ஒருகுலமா யிணைந்து வாழ்வோம்.
புன்னினைவும், புல்லடிமைத் தொண்டுஞ் சூது
பொறாமைகளுஞ் சாதிமதப் பொருபொருப்பும்,
தன்னலமுந் தவிர்த்தெல்லா மனமு மொன்றித்
தன்னறிவுக் கடவுளையே சார்ந்து வாழ்வோம்.
முன்னேற முலகின்முன் னணிவ கிப்போம்.
முயற்சியணிந் தெழுந்திருமின் உறுதி கொண்டே!

## 2. செல்வத் தமிழீர் !

என்னில்லம் விளக்கெரியத் தீபி ரந்தால்,
'ஏன்மூடா' என்னுரோ வுலகோர்? சொக்கப்
பொன்னிருக்கப் புதைந்துள்ளே பிறர்பால் ஐயம்
புகுவாரோ புகலிருக்கப் புறம்போ வாரோ ?
அன்னையுமை யழைக்கின்ருள் அமுத மேந்தி,
அருளடியார் இசைக்கின்ருர் ஆர்வங் கூறி,
உன்னரிய நாகரிகம் ஒளிரப் பெற்றும்,
உறங்குதிரோ தமிழர்களே, யுண்மை காணீர் !

## 3. தமிழர் பழம்புகழ்

முன்னுளில் உலகமெலாங் கப்ப லூர்ந்தோம்
முச்சங்கக் கலைவளர்த்தோம்; தொழில்வ ளத்தாற்
பொன்னுறு நாட்டினிலே பொங்க வைத்தோம்
புவியரசர் கவியரசர் புலனை வென்ற
தன்மயராந் தவத்தரசர், தறுகண் வீரர்,
தணலுங்கற் பரசிகளுந் தழைக்க வாழ்ந்தோம்.
அன்னபுகழ் இந்நாளும் அடைய வல்லோம்;
அயராம லெழுந்திருமின் அருட்ப ணிக்கே.

## 4. தமிழ்ச் செல்வம்

தங்கமணிப் படுகையிலே முத்திறைத்துத்
தவழமுத வெள்ளமென நடைகு லுங்குஞ்
சங்கமணிச் செல்வங்கள் மல்கு நாட்டீர்,
தமிழ்மறையைப் புவிக்கீந்த செந்நாப் போதர்,
துங்கமணிக் கவியரசன் கம்பன், செவ்வி
துலங்குமிளங் கோவடிகள் சொல்லை யுண்ட
சிங்கமணித் தமிழர்காள், கலையி னுச்சிச்
சிகரத்திற் செயக்கொடியை நாட்ட வாரீர் !

## 5. தமிழ்ப் புரவலர் ஈகை

வீரமுர சணை யுறங்கு மோசிகீரன்
விழிக்கும்வரை வெண்கவரி வீசி நின்றான் ;
சேரலிரும் பொறையரிசிற் கிழார்வாய் வந்த
செழுந்தமிழுக் கரியணையைப் பரிசி லீந்தான் ;
பாரியொரு முல்லைக்குத் தேரை யீந்தான் ;
பரிசிலீந் திளந்திரையன் பாடல் பெற்றான் ;
கோரிவந்த புலவனுக்குத் தலைகொ டுக்கக்
குறித்தகும ணன்கொடையின் கொற்ற மென்னே !

## 6. இளஞ் சிங்கங்காள் !

முத்தமிழாம் முக்கனியைச் சுவைத் தறிந்து
மூவேந்தர் முற்காலம் போற்றி னார்கள்.
இத்ததிநந் தமிழ்வருந்து மிடர்கள் கோடி;
எழுந்திருங்கள் வீறுடனே யிளஞ்சிங் கங்காள்!
புத்தமுத வெள்ளம்போல் அன்பு பாய்ச்சிப்
புகழேறிப் புதுமலர்கள் பூத்துக் காய்க்க,
நித்தமிந்தத் தமிழ்ப்பயிரை நினைவாய்க் காப்போம்,
நீடோங்கித் தமிழ்மரபு நிலவ மாதோ.

## 7. தமிழர் போர் வீரம்

கடற்படைகொண் டிலங்கைவென்று தக்கிணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரை வென்று,
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை இமய மேற்றி,
அடற்கரிய தமிழ்வீரப் படையால், பொன்னி
யணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்
சுடர்மணிப்பூம் புகாராண்ட கரிகாற் சோழன்
துலங்கியநன் னுடுதித்த சூரர் நீரே!

## 8. தமிழர் வெற்றி

கண்ணகிக்குப் பத்தினிக்கற் கொணரப் *போந்தோன்,
கனகவிச யர்செருக்கைக் கடிந்து போரில்,
விண்ணெட்ட வெற்றிமுர சொலித்த நாட்டீர்,
வியன்கப்பற் படையூர்ந்தி ராச ராசன்
கண்ணெட்டு நாடெல்லாங் கைக்கொண் டாண்டான்.
கலைச்சாலை அறச்சாலை கவின்செய் கோயில்
விண்ணெட்டப் புகழ்விளங்கச் செய்தான்; அன்னன்
வெற்றிநினைந் தாவேசம் பெற்று வாரீர்!

## 9. தமிழ் வேந்தர்

தொக்கெழுவர் பெரும்படையோர் தொடுக்க நக்குத்
துரும்பென்ன மதித்தவரைத் தலையா லங்கான்
எக்கிமடித் தெமனுக்கே விருந்த ளித்தான்
இளம்வீர னெடுஞ் செழியன்; இமயமீதே
உக்கிரபாண் டியன்மீனக் கொடியு யர்த்தான்;
உலகுபுகழ் அனிபாலன் அகுஸ்தன் ஸீஸர்
சிக்கந்தர் செமிராமி தெரயஸ் தம்மிற்
சிறந்திடுநல் லறவேந்தர் செழித்த நாட்டீர்!

## 10. வேந்தர் அறவுணர்ச்சி

குற்றமிலாக் கோவலனைக் கொன்றேன், செங்கோல்
கோடியதென் றுயிர்விட்டான்செழியர்கோமான்.
கற்றறிபார்ப் பான்மனையைக் காத்த மாறன்
கதவிடித்த பிழைக்காகக் கைகு றைத்தான்.
கொற்றத்தேர்க் காலிலொரு கன்று சாகக்
குமரனையே மனுச்சோழன் பலிகொ டுத்தான்.
பொற்றிருவா ராய்ச்சிமணி புலம்ப நீதி
புரிந்ததமிழ் வேந்தர்புகழ் புகலப் போமோ!

---

* சேரன் செங்குட்டுவன்.

## 11. தமிழ்ப் பெண்டிர்

கண்ணனலால் வேளெரித்தான் கயிலை யாளி ;
கற்பனலாற் கண்ணகியோர் நகரைத் தீய்த்தாள்.
ஒண்மணிச்சேய்போர்க்குடைந்தல் உண்ட மார்பை
உடனறுப்பே னென்றுளோர் தமிழ்வீ ரத்தாய்.
கண்ணனைக்கா தற்கனலாற் கலந்தாள் கோதை ;
காசினிக்கே யறமளித்தாள் கலைதேர் ஔவை.
எண்ணமுருக் கிசைபிழிந்தாள் அம்மையாரும்
இனியதமிழ்ப் பெண்ணமுதின் இயல்பைக் கேளீர்!

## 12. தமிழர் பொதுநோக்கு

நந்தனார் திருப்பாணர் *நம்பு சாம்பான்
நன்முத்தி பெற்றகதை நாடு சொல்லும்
அந்தணர் அறவோரே யென்னுங் கொள்கை,
அன்புசிவம் அன்புமத மென்னு முண்மை
தந்ததமிழ் மரபினரே. திருவ ருட்பா
சமதருமப் பயிர்வளர்க்குந் தவநாட் டீரே,
எந்தமதச் சாதியிறு மாப்பு மிங்கே
இல்லாமல் உள்ளொன்றி யினிது வாழ்வோம்.

## 13. தமிழர் அஞ்சா நெஞ்சம்

நெற்றிக்கண் காட்டிடினுங் குற்றமென்ற
நிகரில்லா நக்கீரர் நிலவு நாட்டீர்,
கொற்றசிவ னடிக்கல்லாற் குனியோ மியார்க்குங்
குடியல்லோம் கூற்றஞ்சோம் எனுஞ்சொற் கோனைப்
பெற்றதமிழ் நாட்டீர்காள், பிள்ளை ஞானப்
பெரியமறை தந்துதமிழ்ப் பெருமை நாட்டக்
கற்றதமிழ் நாட்டீர்காள், கலங்கா துள்ளம்
கடமையினைப் போற்றிடுவோம் கடவுள் காப்பே.

---

* பெற்றான் சாம்பான்

### 14. தமிழர் ஆண்மை

இன்னமுதத் தமிழர்களே யிசைந்து வாரீர்,
ஏங்காம லேமாந்து தூங்கி டாமல்,
உன்னதமாய்த் தலைநிமிர்ந்து நடப்போ மிந்த
வுலகினிலே பிறநாட்டார் உழைப்பா லுற்ற
மன்னிசையை நாமடைய மயக்க மேனோ?
மனிதனியற் றியதையொரு மனிதன் செய்வான்
அன்னைவெறி பிடித்திடுமின்; ஆண்மைகொண்டோர்
அடைவார்கள் வெற்றியிதி லைய முண்டோ?

### 15. வேற்றுமை யொழிமின்

சாதிமதச் சச்சரவை யொழித்தி டுங்கள்;
சகிப்புடனே சமரசமும் போற்றி டுங்கள்;
பேதபுத்தி விலக்கிடுங்கள்; பெண்ணாண் கண்போற்
பிரியாது நல்லறிவைப் பெற்றி டுங்கள்;
ஆதிபரா பரன்கோயில் அவனி யெல்லாம்
அவன்சக்தி விளையாட்டே யகில வாழ்க்கை,
வேதமெலாம் தன்னறிவின் விளக்க மென்றே
விஞ்ஞானத் தாலறிந்து விளங்கு வீரே.

### 16. தமிழர் ஒற்றுமை

கயிறெடுத்துத் தன்கழுத்தில் மாட்டிக் கொண்டே
கதறுகின்ற பேதையைப்போற் காய வாழ்வின்
உயர்நலத்தை யுணராம லுமக்கே கேடாம்
ஊறுகளைச் செய்யாதீர்; உலக னேகம்;
பெயர்வடிவச் சாயத்தைப் பெரிது பண்ணிப்
பிரிவினையாம் வஞ்சப்பேய்க் கிடந்த ராதீர்;
உயிர்க்குயிரா மொருபொருளை யுள்ளு ணர்ந்தே
ஒற்றுமையாய் வாழ்ந்திடவே கற்றார் மேலோர்.

## 17. தமிழகம்—கோயில்

பண்பரவுந் தமிழகமே நமது கோயில்,
பார்க்குமுயிர் நம்முயிராம்; பார்வாழ் வெல்லாம்
விண்பரவத் தமிழ்வெற்றிக் கொடி பிடித்து,
வினைவேள்வி செய்திடவே விளைந்த தென்போம்;
கண்பரவுந் திசையெல்லாங் கல்வி செல்வங்
கலைதொழில்வா ணிபம்பெருகக் கருத்து வைப்போம்;
தண்கடலைக் கடந்துதமிழ் வேத மார்க்கத்
தலைநிமிர்ந்து வாரீரோ தமிழ்நாட் டீரே!

## 18. வாழும் வகை

தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர் கையில்;
தாய்நாட்டுத் தொழில்களெலாந் தனயர் கையில்;
தமிழர்வா ணிகமெல்லாந் தமிழர் கையில்;
தமிழ்த்துறையி லியங்குவது தமிழர் கப்பல்;
தமிழ்ச்சமு தாயத்தொண்டு, தமிழர் கூட்டால்,
தமிழ்நாடு தமிழர்க்கே; தமிழர் சேமந்
தமிழர்களின் ஒற்றுமையே; தமிழர் உள்ளம்
தமிழுள்ள மெனில்வாழ்வு தழைப்ப தாமே.

## 19. பிறநாட்டைப்போல் முன்னேறுக!

சப்பானுஞ் சொமனியு மிங்கி லாந்தும்,
சமதரும ரஷியாவும், அமெரிக் காவும்,
இப்படியே முயற்சியினல் இசைபெற் றோங்கும்
இயல்பறிந்தும இழிநிலைபி லுறங்கு வீரோ?
ஒப்பில்லாக் கலைபயில்வோம்; புலவ ரோங்க
வுரிமைதொழில் வாணிகத்தாற் குபேர ராவோம்.
இப்பாரி லிணையில்லா நாட்டா ரென்றே
யிசைபெறுவோந் தமிழர்களே யிசைந்து வாரீர்!

## 20. தமிழ்த் தவ சக்தி

ஆவியினு மரியதமி ழன்பீர் வாரீர்;
ஆர்வத்தா லற்புதங்க ளுலகிற் செய்வோம்
தேவாதி தேவர்களுந் தமிழே பேசச்
செய்திடுவோம்; விண்ணரசைத் திகழ வைப்போம்;
சீவனிலே பேரின்பச் சிலிர்ப்பைக் காண்போம்;
செந்தமிழே முத்திநிலை சேர்க்கு மென்போம்;
யாவர்க்கு மரியதவ சக்திக் காந்தம்
அனல்வீசுந் தமிழகத்தை யன்பு செய்வோம்.

## 21 தமிழர் பெருமை

தனக்கியல்பாம் பெருமையினைத் தான றிந்து,
தன்னகத்துத் தவக்கனலைத் தான் வளர்த்தே,
எனக்குனக்கென் றில்லாம லெல்லா மொன்றாய்
இயல்வளத்தைப் பகுத்துண்ணும் இல்லந் தாங்கி,
மனக்கினிய கல்விசெல்வ மல்கி, வாழ்வு
வளமோங்கி யுலகிற்கு வன்றொண் டாற்றி,
இனிக்குமொழி தமிழென்னு மேற்ற மோங்கி
யின்புறுவோ மன்பிறைவ னருள்க மாதோ!

## 24. வா வா!

துள்ளித்துள்ளி வாவா
தோள்புடைத்து வாவா
வெள்ளம்போல வாவா
வெற்றி யுண்டு தமிழனே!
நள்ளிரவைப் பிளந்திடும்
நாதமின்னல் போலவே
கள்ளப் பகையைக் கட்டழிக்க
கந்தன் சக்தி வேலுண்டு. (1)

எல்லைப் புறத்தைக் கா, வா
இகலை யோட்ட வாவா
கொல்லைப்புறத்திற் சுரண்டிடும்
கொடிய நரியை ஓட்டு
கல்லைச் சாடும் வீரா
கனல் பறக்க வாவா
நல்லறத்தைக் காக்க
நன்மனதைத் தாதா. (2)

அறிவுவளர அன்புவளர
அறம்பொருள் வளரவே
உரிமைவளர ஒற்றுமை
உலகெலாம் வளரவே
பிரிவினை ஒழியவே
பீடைகள் ஒழியவே
பெரிய கனவு பலிக்கவே
பெருமையாக வாவா. (3)

நமதுநாடு நமதுவீடு
நமது சக்தி நம்மிடம்
நமது கல்வி தொழிலெலாம்
நமது பண்பில் வளரவே
அமைதியான தமிழகம்
அமரலோக மாகவே
குழுதமிட்டு வள்ளுவர்
குறளையோதி வாவா! (4)

## 25. கடமை

சேர்ந்து வாழும் திறமறி வோமே!
தீர ராகத் தலைநிமிர் வோமே!
சோர்ந்தி டாது துணிந்துநிற் போமே!
சொல்லும் செய்கையும் ஒன்றச்செய் வோமே!
கூர்ந்த நன்மதி கொண்டுயர் வோமே!
கொண்ட கொள்கைக் குயிர்தரு வோமே!
நேர்ந்த போதறத் தொண்டுசெய் வோமே
நேரத்தைப் பொன்னென் றேநினைப் போமே!

தன்ன லத்தைத் தவிர்த்திடு வோமே;
தாய்ந லஞ்செய் தவம்புரி வோமே!
அன்னி யர்வ லையைய றுப்போமே;
ஆண்மை தன்னை மிகவளர்ப் போமே!
மன்னன் எம்மனச் சாட்சியென் போமே!
மாநிலம் பொதுவாய் மதிப் போமே!
இன்னமும் இருளில் மடியாமல்
இரவி போன்று விழித்தெழு வோமே!

## 26. புதுமை பெற்ற தமிழ்க் கலை

எங்கும் பொன்மயம்; எங்கும் பசுமை;
கங்குலை விழுங்கிக் கனிமுகங் காட்டும்
அருணோ தயம்போல் அருங்கலை யரசி
கருணை பூத்த கவின்மலர் சூடித்
தாகந் தணிக்குந் தண்ணமு தென்ன
மோகனக் காந்த முறுவல் பளிச்சிட
மனத்தினை யள்ளும் வடிவழ குடனே
தனக்கிணை தானுந் தண்டமிழ்ச் சோலையில்
கண்கொளாக் காட்சியாய்க்கனல்பெறவிளங்கினள்!
எண்கொளாப் பாவலர் இசைத்தனர் வாழி.
குயில்கள் பாடின கொஞ்சிளந் தமிழ்ப்பண்;
மயில்க ளாடின மருதயா ழொத்தே.
மானும் மழவும் மகிழ்ந்து துள்ளின.
வானும் வந்து வணங்கிடப் புவியைத்
தெய்வப் பாவலர் திருமறை முழக்கினர்.
செய்ய நாவலர் சீர்த்திக ளோதினர்.
கைத்திற லற்புதங் காட்டினர் ஓவியர்.
மெய்த்திறல் வீரர் விடுதலை முரசம்
கொட்டி யெழுந்தனர் குவலயங் குலுங்க;
கட்டுகள் பட்டென விட்டன; நாடு
தலை நிமிர்ந்தது; மலைபோல் சுதேசக்
கலை நிமிர்ந்தது; காட்சியென் சொல்வேன்!
வறண்ட நிலமும் வசந்தச் சோலையாய்த்
திரண்டது; பூவும் தீங்கனி வளமும்.
தாதுகுங் கற்பகந் தழைகொம் பன்ன

மாதரார் கூடி மங்கலம் பாடினர்.
புதுநகை பூத்தது; மதுமல ரியற்கை
வதுவைநா ளிசைத்தது; மணம்வளர் தென்றல்
திங்களுங் கதிருந் திளைத்தன வின்பம்.
மங்கலச் செங்கோல் மலர்க்கையி லோங்க
விலையிலா மணிகள் வியன்பெறச் சமைத்த
கலைச்சிங் காதனத் திலகினள் எந்தாய்!
திசைதிசை நாட்டினர் திருமுடி சூட்டினர்;
இசைத்தனர் பல்லாண் டிமையவர் குழாங்கள்:
தேனினு மினிய தீந்தமிழ் வாழ்க!
வானுல கெங்கும் வளர்க தமிழ்மணம்
நுகர நுகர நூதனந் தோன்றும்
பகரப் பகரவாய் பாலூற் றூறும்.
தமிழ்க்கலை யோங்கித் தழைக்க வுலகெலாம்
அமரவாழ் வுறவே யருளுக தாயே!

---

## 27. திருக்கொலு

அரனருட் புதல்வி; அருங்கலைச் செல்வி
வரனருள் முதல்வி; வாழிய தமிழ்த்தாய்;
அறிவனல் விழியாள்; அமுதக் கதிர்விரி
முழுமதி முகத்தாள்; மோகனக் காந்தம்
வீசிடும் அரசி மின்னெனத் தெறிக்கும்
பொலிநகை முத்தம் பொழிந்திடு வாயாள்.
தவச்சுடர் காந்துந் தணல்மணி முடியாள்

பொன்மணி யணியினும் பொலிவுறுங் கோடி
வாடா நறும்பா மாலைகள் அணிந்தாள்.
தென்னு டெல்லாந் தன்னு டாகப்
பாண்டிநா டென்னும் பளிங்கணை யமர்ந்தாள்.
வைகையும் வருணியும் மலரடிச் சிலம்பாம்
இலங்கை அன்னம் இணையடி தாங்க
வீற்றிருக் கின்ருள் வீரர்க் கிறைவி
எழுதா மறையாம் இன்னிசை பிழியும்
காவிரி யாழைக் கைத்தலம் பிடித்தாள்
அறமும் வாய்மையும் அருளும் விளங்கும்
வெற்றிக் கதிர்க்கொடி விண்ணுற வுயர்த்தினுள்
சிவனர் சூலந் திருக்கரங் கொண்டாள்
இயலிசை நாடக வியன்கலை யணிந்தாள்
முருகவேள் மயில் 'இது முகில்' எனத் தோகை
விரிநடம் புரியும் செறிகுழற் பாவை
ஐந்திணைச் செல்வம் அளித்திடும் அரசி
எட்டுத் திசையும் இசைபரந் தொலிக்க
வார்கடல் முரசம் வாழிய என்ன
கார்வரை இருபுறம் கைலாகு கொடுக்கப்
பொன்னும் பச்சைப் பூவுங் கனியும்
குலுங்குஞ் சோலைக் குளிர்நிழல் இருந்தாள்
தமிழீர் வணங்கீர்; தரணியீர் வணங்கீர்
அறிவுத் தெய்வம் அருளொளித் தெய்வம்
அழகுத் தெய்வம் அருந்தமிழ்த் தெய்வம்
எந்தாய் வாழ்க! எந்தாய் வாழ்கவே!

# 28. காலைப் பாட்டு

ராகம் : **சிந்து பைரவி** தாளம் : **சாபு**

வான் சொலித்தது ; மண் சிலிர்த்தது ;
வாழி பாடின புள்ளினம் ;
தேன்மணத் தமிழ்த் தென்றல் மங்கலச்
செய்தி கொண்டு பராவுது ;
மீன் மறைந்தது ; கங்குல் வீந்தது ;
மெய்ச் சுடர் நகை பூத்தது ;
ஆன்ம வீறுகொண் 'டன்னை போற்றி'யென்
றன்பி சைத்தெழு வீரனே ! (1)

இன்னிசைக் குழல், வீணை, மத்தளம்
ஏத்திசை யுடன் ஆர்த்தன ;
பன்ம தத்தினர் ஒன்று கூடிப்பல்
லாண்டு பாடித் துதித்தனர் ;
மன்னு மாதவர் ஆசி கூறினர் ;
மகுட மேந்தினர் மன்னவர்
பொன்னரி யணை யேற்றி யன்னையைப்
போற்றி செய்ய வெழுந்திராய் ! (2)

கற்ற றிந்த புலவர் நல்ல
கலைவிருந்துடன் வந்தனர்
கொற்ற வீரர்கள் வெற்றி பேரிகை
கொட்ட வந்து குவிந்தனர்
பெற்ற தாயைப் புறக்க ணித்திடும்
பிள்ளையும் ஒரு பிள்ளையோ ?
ஒன்று மைமுர சார்த்தெ ழுந்துநில்
ஒப்பி லாத்தமிழ் வீரனே ! (3)

வாழ்க செந்தமிழ் வாழ்க நந்தமிழ்
வண்மை மாமர பென்றுமே....
வாழ்க வள்ளுவர் கம்பர் சேக்கிழார்
வந்த பைந்தமிழ் நாட்டிசை
வீழ்க புல்லடி மைத்தளை களும்
வேற்று மைத்துயர் தீரவே
சூழ்க சுத்த சுந்தரச் சுடர்
சூர ரோங்குக பாரெல்லாம்! (4)

---

## 29. தமிழனுக்கு

ராகம் : முகாரி தாளம் : ஆதி

வலிவு பெருக வேண்டும்—தமிழா!
வாழ்வி லின்பம் வேண்டும்
மெலிவு பாவ மன்றோ—தமிழா!
வீறு கொண்டு பாய்வோம்
நலிவி லாத சக்தி—தமிழா!
நம்மு ளத்தில் உண்டு
கலியைச் சாட வல்லோம்—ஆன்மக்
கனலைத் தூண்டி வெல்வோம். (1)

வீட்டைப் பெருமை செய்வோம்—தமிழா!
வீர ராக வாழ்வோம்
நாட்டைப் பெருமை செய்வோம்—தமிழா!
நல்ல தொண்டு செய்வோம்
ஏட்டுப் பூச்சி போலே—தமிழா!
இனியிருக்க லாமோ—சிங்கக்
கூட்டம்போ லெழுந்தே—புகழ்க்
கோபுரஞ் சமைப் போம். (2)

சாதி வேறுபாடு—பல
சமய வேறுபாடு
பேத புத்தியாலே—வந்த
பிணியெனத் தவிர்ப்போம்
ஆதி சக்திமைந்தர்—மாந்தர்
யாவருஞ் சமானம்—இந்த
வேத வுண்மை யுணர்வோம்—ஞான
வீர ராக வாழ்வோம். (3)

---

## 30. மீசை முறுக்கி

ராகம் : மாண்டு தாளம் : ஆதி

மீசை முறுக்கி எழுந்திரடா
வீரத் தமிழா! உலகினிலே
ஆசை கொண்ட பொருளெல்லாம்
அடைந்து வாழ்வை அனுபவிப்பாய். (மீ)

எவருககும் நீ அஞ்சாதே நீ
யாருக்கும் தாழ்வில்லை பாருலகில்
நவ பாரதத்து நாயகனே
நடமுன்னே வெற்றித் தெம்புடனே. (மீ)

ஆண்மை ஆண்மை என்றிடுவாய்
அடிமைசெய் அச்சததைக் கொன்றிடுவாய்
கேண்மை பெருகக் கிளைபெருகக்
கீர்த்தியுடன் வாழ்வாய் நேர்த்தியுடன். (மீ)

அன்னிய மாயத்தை ஓட்டிடுவாய்
அன்பைத் தமிழகம் நாட்டிடுவாய்?
தன்மதிப் புடனே கர்ஜனைசெய்
தமிழன் சக்தித் தணலெனவே (மீ)

## 31. தமிழர் திருச் சபை

சிறுசிறு மழைத் துளிகள்
சேர்ந்து வெள்ளம் ஆவபோல்,
சிறுசிறு விதைக ளூன்றிச்
செய்ய சோலை யாவபோல்
சிறுசிறு மொழிகள் கூடிச்
சீரிய நூலாவ போல்,
சிறுசிறு நற்செய்கை சேர்ந்து
தேச நன்மை யோங்கவே!

மாதரின் சுதந்தரம்,
மனிதரின் உரிமைகள்,
பேதமற்ற நீதிகள்,
பிறப்பினிற் சமத்துவம்
தீதகற்றுந் தொண்டுகள்
சிறுமையற்ற சிந்தைகள்
வாதமற்ற வொற்றுமை
வளர்ந்து முன்சென் றேங்குவோம்

## 32. தமிழ்த் துடிப்பு

இன்னிசை யணிந்த பொன்னிளஞ் செல்வி
இனிமையே தன்பெய ராளுள்!
முன்னுயி ரெல்லா மகிழ்பொது நெறியை
மாண்புற வழங்கினள் எந்தாய்!
பன்மொழி படைத்த தொன்மொழி யரசி,
பரமனின் வரம் பெறு புதல்வி,
தன்னிக ரற்ற தமிழெனு மமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம்! (1)

சிங்கம்போ லெழுந்து வாருங்கள்; அன்புச்
செல்வர்காள் அன்னையின் பணிக்கே;
தங்கம்போற் பொலியுந் தளிரிளம் பெரியாள்
தகையினைச் சகமெலா முரைப்போம்;
செங்கதிர் பரவுந் திசையெலாந் தமிழின்
சீர்மூர சதிர்ந்திடச் செய்வோம்;
அங்கையில் உழைப்பும் அகத்தினில் வீறும்
அணிந்துட னருட்பணிக் கெழுமின்! (2)

எண்ணுறும் போது தமிழையே யெண்ணீர்;
இசைத்துழி தமிழையே யிசைப்பீர்;
பண்ணுறும் போது தமிழ்ப்பணி தனையே
பழுதறப் பண்ணியின் புறுவீர்;
உண்ணுறும் போதும், உறங்கிடும் போதும்,
உயிருளந் துடித்திடும் போதும்,
கண்ணினு மரிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுவீர்! (3)

செல்வர்களெல்லாந் தமிழ்ச்செல்வம் வளர்மின்
திறங்கொண்ட வீரவா லிபர்காள்
அல்லொடு பகலும் அருந்தமிழ் முழங்கும்
அற்புதக் கோயில்க ளமைமின் !
கல்வியுந் தொழிலுங் கைவந்த புலவர்
கவினுறுங் கலையணி செய்மின் !
நல்லன புரிய நாடுவோர் தமிழின்
புகழையே நலமெனப் புரிமின் ! (4)

எத்தனை சித்தர், எத்தனை புலவர்,
எத்தனை அருட்சுடர்க் கவிகள்,
எத்தனை கலைஞர், இலங்கின் றிங்கே—
எங்கவர் உலகிசை முன்னே ?
தத்தம திசையே முழக்குவ ரயலார் ;
தனிப்புகழ் பலபல படைத்தும்
செத்தவர் போலே யிருப்பது சிறப்போ
சிரமுயர்ந் தெழுந்திரு தமிழா ! (5)

வள்ளுவர், கம்பர், வள்ளலார், தாயு
மானவர், வியாசர், வான் மீகி,
ஒள்ளிய காளி தாஸன், *விர்க் கிலியன்,
ஹோமர், மா ஷேக்ஸ்பியர், தாந்தே,
தெள்ளிய தாகூர் திருவெலாங் கூட்டித்
தேவரி னமுதினு முள்ளம்
அள்ளுறுங் கவிதை யணிகளைச் சூட்டி
அன்னையைப் பணிகுவோந் தமிழா ! (6)

இந்திய ரேனும், கிறிஸ்துவ ரேனும்
ஜைனர் இஸ்லாமியர் பௌத்தர்
எந்தநற் சமய சந்ததி யேனும்,
எந்தமிழ் மக்களோர் குடும்பம் ;
அந்தமில் வெவ்வே றுடைக ளணிந்தும்
ஆண்பெண்ணின் அகத்துடிப் பொன்றே
நந்தமி ழிரத்தங் கலந்தவ ரெல்லாம்
ஞாலத்திற் சேர்ந்துமுன் செல்வோம் ! (7)

சுற்றிலும் வடுகர், கன்னடர், கொங்கர்,
சொல்லெழு கூர்ச்சரர், வங்கர்,
பற்றுத லுடனே இந்தியைப் பரப்பும்
பண்பினர் திருவினைப் பாரீர்!
பெற்றதாய் தன்னைப் பெருமைசெய் யாத
பேதையும் உலகினி லுண்டோ ?
கற்றதன் பயனுந் தாய்மொழி யான
கடவுளைப் பணிதலே, தமிழா ! (8)

வானுற வளருந் தமிழிசை முன்னே
மாநிலம் வணங்கிட வேண்டும்;
தேனுறுந் தமிழார் திருவிசை முழக்கில்
தேவர்கள் நடமிட வேண்டும்;
மானுறு பாகன் மகள்கொலு விருக்க
மன்னர்கள் பணிசெய வேண்டும் ;
யானுறும் பிறவி மகிழுமக் கணமே—
யாங்கிலுந் தமிழ்முழங் குகவே ! (9)

## 33. புதுமை முழக்கம்

புதுமை பெற்ற தமிழர் வருகவே!—வீரப்
பொலிவு கொண்ட தமிழர் வருகவே!
பதுமை போற் பிறர்கை யாடிடாச்—சுயேச்சைப்
பான்மை கொண்ட தமிழர் வருகவே! (1)

கால வெள்ளம் பொங்கி யோடுதே—அதன்முன்
கையைக் கட்டிச் சோம்பி நிற்பமோ!
பாலம் போட்டு நதியைத் தாண்டுவோம்—ஞாலப்
படகை யோட்டித் துறைக ளெட்டுவோம்! (2)

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கென்றே—வீண்
வாத மிட்டு நோத லுற்றிடோம்.
கொடுக்குங் கலையைக் கொடுத்தெல் லாருக்கும்-நாம்
கொள்ளுங் கலையைக் கொண்டு வாழுவோம்!

தமிழ கத்தை நமது வீடென்போம்—ஹிந்துஸ்
தானத்தை நாம் வாழும் தெருவென்போம்
எமது நகரிவ் வுலக மென்னுவோம்—அதில்
இன்ப மோங்கக் கூடி வாழுவோம்! (4)

வீரம் வீர மென்று கூறுவோம்—நாளும்
வீறு பெற்ற தீரராகு வோம்
பாரை நாற் புறமும் நோக்குவோம்—புதுப்
பயனை வென்று நம்ம தாக்குவோம்! (5)

## 34. தேன் கூடு

ஓம் எனச் சுற்றி வருவோம்—இந்த
உலகக் கலைப் பொழிலில்
தீம் என மலர் மலராய்—இன்பத்
தேன் சுவை பருகிடுவோம்.

ஆரியத் தேனுண்போம்—வீறுகொண்ட
ஆங்கில ரசமுண்போம்
பாரிசை மொழி மலரில்—பல
பண்ணிசை மது வுண்போம்.

தென்மொழி யமுதமுடன்—பல
திசை மொழி நயங்களெல்லாம்
அன்புடன் கூட்டிடுவோம்—இந்த
அவனியை ஊட்டிடுவோம்.

தமிழ் என்னும் தேன் கூட்டில்—கலைச்
சங்கம் அமைத்திடுவோம்
அமிழ்தினை விரும்புகின்ற—உலகின்
அளியினம் கூடுகவே!

## 35. நம் விரதம்

மனச் சாட்சியினை மதிப்போம்—ஒரு
வானகக் கடவுளைத் துதிப்போம்
இனச் சாதிகளை ஒழிப்போம்—இங்கே
எல்லாரும் ஒன்றெனச் செழிப்போம்.

வானுலகே எங்கள் கோயில்—அதன்
வளர்பணியே மோட்ச வாயில்
மானுடத் தொகுதியே மூர்த்தி—அதன்
மங்கலமே இஷ்ட பூர்த்தி.

கடவுளுக்குச் சமமாகவே—இங்கே
காணும் எதையும் வணங்கிடோம்
திடவுளங் கொண்டு முயலுவோம்—வேறு
செவ்வாய் சனி யொன்றும் காணிலோம்.

பொல்லன வேருடன் போக்குவோம்—இங்கே
புண்ணியச் சோலையுண் டாக்குவோம்
நல்லன யாவையும் போற்றுவோம்—எந்த
நாளும் அருட்பணி யாற்றுவோம்.

அறமென் றறிந்ததைச் செய்குவோம்—நெஞ்சில்
அச்சம் அழுக்காறைக் கொய்குவோம்.
பிறவுயிர் எமதெனப் பேணுவோம்—அன்பு
பேணும் விரதமே பூணுவோம்.

## 36. பொங்கல் மங்கலம்

ராகம் : செஞ்சுருட்டி] [தாளம் : ஆதி

மங்கலப்பண் முழங்கிடுவோம்—புது
வசந்த வனத்தினிலே உலவிடுவோம்
சங்கமாகக் கூடிடுவோம்—பல
சாதிமத வேற்றுமையைச் சாடிடுவோம்
தங்கநிறக் கனி பிழிந்தே—கண்டு
சர்க்கரையும் செங்கரும்புச் சாறும்கலந்தே
பொங்கலுடன் உண்டிடுவோம்—ஒரு
பொதுநிலை வாழ்வுவரக் கண்டிடுவோம். (ம)

நீர்வளம் பெருகிடவே—நல்ல
நிலவளம் பயிர்வளம் பெருகிடவே
கார்வளம் பெருகிடவே—மலர்
கனிவளர் பசுவளம் பெருகிடவே
ஏர்வளம் பெருகிடவே—குழல்
இசைவளம் பெருகிடத் திசைதிசையும்
ஊர்வளம் பெருகிடவே—செல்வம்
ஓங்கிவளர் முயற்சியைத் தாங்கிடுவமே. (ம)

கூட்டுறவு கொண்டு செழிப்போம்—ஒரு
குலமென ஒன்றுபட்டு நலமுறுவோம்.
ஈட்டியதைப் பங்குவைத் துண்போம்--இனி
ஏழையில்லை மன்னரில்லை தோழருலகில், (ம)

உடலினை உறுதி செய்வோம்—நன்றாய்
    உழைத்துப் பிழைத்துப்பொது நலம் புரிவோம்
கடலுடன் வான்கதிர்போல்—நம்
    கண்டுமுதல் ஊருக்குக் கொண்டுதருவோம்
கடன்சுமை தீர்ந்திடவே—நல்ல
    கைத்தொழிலும் வாணிகமும் உயர்ந்திடவே
மடவிருள் ஒழிந்திடவே—நாட்டு
    மனைதொறும் கலைமகள் வாழ்ந்திடவே
மங்கலப்பண் முழங்கிடுவோம்—தமிழ்
    மக்களுக்கு வாழ்த்திசைகள் வழங்கிடுவோம்(ம)

---

## 37. தமிழர் கூட்டப் பாட்டு

ராகம்: **கல்யாணி**] [தாளம்: **ரூபகம்**

**பல்லவி**

வாழிய தமிழ் அன்னை வாழ்கவே—ஜயஜயஜயஜயஜய
வாழிய தமிழ் நாடு வாழ்கவே—தமிழர் வாழ்க (வாழிய)

**அநுபல்லவி**

ஆழிசூழ் உலகம் எங்கும் அன்பு சூழ்கவே
    அகமும் புறமும் அருளும் பொருளும்
    அழகும் பொலிகவே—ஜய (வாழிய)

**சரணங்கள்**

பொன்னி பெண்ணை வைகை பொருளை
    பொங்கிடும் பசு நாடு
தென்னை வாழை செங்நெல் கரும்பு
    செழித்திடும் திரு நாடு—செல்வம்
    தழைத்திடுந் திரு நாடு—வாழ்க. (வாழிய)

வறுமை மடமை அடிமைப் பேய்கள்
வருவதும் இனி உண்டோ ?
அறிவுந் தொழிலும் கலையும் பெருகி
அகமகிழ்வுற வாழ்வோம்—கவி
அமுதம் பொழிய வாழ்வோம்—ஜய (வாழிய)

வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையினை
வள்ளுவர் திருக்குறள் அளிக்கும்....
துய்ய ஸமரச சன்மார்க்க ஜோதியைத்
துலக்கிடுந் தமிழ் வேதம்—புவி
தொழுதிடுந் தமிழ் வேதம்—வாழ்க (வாழிய)

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதே
இன்பத் தமிழ்மர பென்போம்.
எல்லாரும் எம்மவர் எல்லாரும் நம்மவர்
எல்லாருமே ஆன்ம நேயர்—உல
கெல்லாம் கடவுளின் கோயில்—
எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லாம் அவன் அருள் ஆடல்-என்றே (வாழிய)

---

## 38. சொல்லும் செயலும்

ராகம்: பேஹாக்] [தாளம்: ரூபகம்

சொல்லும் செயலும் ஒன்று பட்ட
தூய வீரர் வருக
வெல்லும் சக்திக் கனலை வளர்த்து
வியன் செயல்கள் புரிக. (சொல்)

மனமும் ஒன்றி இனமும் ஒன்றி
வலிமை பெற்று வாழ்வோம்
ஜனகணமனச் சாட்சி யான
சட்ட மொன்றைப் பணிவோம். (சொல்)

உள்ளும் புறமும் கள்ளமின்றி
உண்மை யறிவு பொலிய
பிள்ளைபோல வஞ்சமின்றி
பேசிப்பழகிக் கலப்போம். (சொல்)

வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு
மனவிகாரம் இன்றி
அடக்கு முறையும் அகந்தைப் பேயும்
ஆசைவெறியும் இன்றி (சொல்)

பயிர் செழிக்கப் பால் செழிக்கப்
பண்டமாற்றுச் செழிக்க
உயிர் செழிக்க மனைச் செழிக்க
உலகு செழிக்க உழைப்போம். (சொல்)

ஆதிபகவன் அளித்த உலகில்
ஆண்பெண் ஆடும் வாழ்வில்,
சாதிசமய பேதமின்றிச்
சரிநிகராய் வாழ்வோம். (சொல்)

## 39. வள்ளுவர் சொல்லமுதம்

ராகம் : செஞ்சுருட்டி] [தாளம் : ஜம்பை

வானச்சுவையமுப் பாலிற் பிழிந்தது
வள்ளுவர் சொல்லமுதம்
ஞானச் சுவையுடன் காதலும் வீரமும்
நல்கிடும் வேதமிதே.

**விருத்தம்**

தூய்மையே மணிமார்பு தொல்மறையின்
பிழிசாருய்த் துலங்கு கின்ற
வாய்மையே மணி நாக்கு; மங்கலஞ்செய்
மனைவாழ்வே கண்கள்; வீர
நேயமுறும் பொதுநலமே திருமேனி;
நிறையின்ப முறுவல் பூத்துத்
தாயமுதம் விளங்குகின்ருள்—அறத்தேவி
திருக்குறளாய்த் தாள்பெற் றுய்வோம்!

**பாட்டு**

பெண்ணென அன்புடன் ஆணென ஆற்றலும்
பேரின்பம் எய்திடவே
கண்ணென காதல் மனையறங் காட்டிய
கற்பகச் சோலையிதே.

**விருத்தம்**

காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும், கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும், மெல்லிடையில்
மேகலையும், சிலம்பார் இன்பப்

போதொளிருந் திருவடியும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க.

பாட்டு

வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகைசொன்ன
வள்ளுவர் வாழியவே
தெய்வப் புலவர் திருக்குறள் வேதம்
திகழ்க உலக மெல்லாம்.

---

## 40. கம்பன் வாழ்க!

போற்றுக உலக மெல்லாம் புகழுக புலவர் கூட்டம்
சாற்றுக கட்டி யங்கள்; தழங்குக முரசி னங்கள்.
கூற்றையும் குமைத்த கம்பன் குடியர சிந்தி யாவில்
ஏற்றினன் கலையின் உச்சி, எந்தமிழ்க் கொடியை இன்றே.

கற்பகக் கனி பிழிந்து, காதலின் கலையைக் கூட்டி,
அற்புதக் கனவு காணும் ஆயிரம் அழகு சேர்த்தே,
விற்புய வீரம் ஊட்டி, வியன்பெருங் கவிதை செய்தான்.
பொற்புறு புலவன் கம்பன் பொன்முடி தமிழுக் கீந்தான்.

செயந்தரு ராமன் பேரால் சிவாஜிநல் லரசு நட்டான்.
நயந்தரு தியாக ராசர் நல்லிசை யரங்கு செய்தார்
பயந்தவிர்த் துரிமை தந்தார் பாரதத் தந்தை காந்தி
சுயங்கலை யுலகு செய்தான் சுதந்தரக் கம்ப நாடான்.

முனியருள் கதைக்கு நல்ல முத்தமிழ்ப் பண்பு நாட்டி,
இனமணிச் சொற்கள் கோத்தே இன்பங்கள் அனைத்துங் கூட்டி,
வனமலர் வனப்புக் காட்டி வரகவி யளித்து மாந்தர்
மனமலர் தோறும் கம்பன் வண்டெனச் சுழல்கின் றனே.

எல்லையில் அழகை யெல்லாம் இனிதுற முகந்து நல்ல
சொல்லமு துடனே ஆழ்ந்த சுவைதரு பொருளுங் கூட்டிக்
கல்வியிற் பெரிய கம்பன் கற்பகக் கவிதை தந்து
பல்கலை யுலகு போற்றும் பரிதியாய் விளங்கி னனே.

கலையுள மட்டும், செஞ்சொற் கவியுள மட்டும், வெள்ளி
மலையுள மட்டும், எங்கள் வள்ளுவர் உள்ள மட்டும்,
தலைசிறந் தோங்குங் கம்பன் தமிழ்சிறந் தோங்கித் தெய்வ
நிலைதரும் இன்பம் போல நிலவுக உலக மெல்லாம்....

---

## 41. அருட்சோதி வள்ளல்

சாதிமதச் செருக்காலே சண்டையிட்டுச் சாம் உலகில் ஆன்மநேய
வேதமெனும் அருட்பாவை விண்மாரி யெனப்பொழிந்த கருணைவேந்தன்
சோதிமிகும் அருட்பொதுவில் சுதந்தரராய்த் துரியநிலை கண்டு வாழ
மேதினிக்குத் தூயதொரு மெய்வழியை விளம்புவட லூரன் வாழ்க!

ஊனுருவி உயிருருவி உள்ளுருவிப் பாய்ந்தின்ப
ஊற்றெடுக்கும்
தேனருவி யாகிவளர் தெய்வீகத் திருவருட்பா
செழித்த ஊற்றை,
மானவர்க்குப் புதுவழியும் புதுயுகமும் புதுவாழ்வும்
வழங்கி யிங்கே
வானரசைக் கொணர்ந்தானைத் துரியவள நாட்டரசை
வழுத்தி நிற்பாம்.

---

## 42. ஆன்ம நேயம்

ராகம் : மோகனம்] [தாளம் : ஆதி

### பல்லவி

ஆன்ம நேய ஒருமை தந்தானே—இங்கே
அருட்பெருஞ் சோதியாய் வந்தானே—வடலூர் வள்ளல்

### அனுபல்லவி

ஞானசிற் சபையிலே ஞாலமெல்லாம் கூடி
நலம்பெற சத்திய சன்மார்க்க நிலை பெற (ஆன்)

### சரணம்

பரந்த தனிக்கருணை சுரந்துசுரந்து மாந்தர்
பிறந்த பிணிகளற மறந்த பொருளைப்பெற
சிறந்த துரியநிலை உறைந்து மாறிப்பிறந்து
திறந்து சிற்சபையிலே உறைந்து மகிழ்ந்திடவே

சீவதத்துவம் சிவ சத்துவம் ஆகவே
செனனமரணபயம் சிதைந்து போகவே
தேவராய்ப் பூவினில் யாவரும் வாழவே
திருவருள் ஆட்சியும் காட்சியும் சூழவே. (ஆன்)

## 43. நாவலர் பெருமான்

கல்வியின் வரம்பு கண்டோன், கடவுண்மாக் கலைக ளெல்லாம்
வல்லவன் பிரமசாரி, வானெனத் தமிழ் பொழிந்து,
செல்வமுந் திருவும் பொங்கச் சிவநெறி செழிக்க வந்தோன்.
நல்லவர் போற்று நல்லூர் நாவலன் வாழ்க மாதோ !

தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புலவன் என்கோ
தமிழ்ப்பணி தனைமணந்த தவமணிச் சைவன் என்கோ
தமிழிசை பரவவந்த தாரகக் குழலே எங்கோ
அமிழ்தினும் இனிய சொல்லான் அழகிய நாவலோனே.

அச்சத்தைத் துறந்தான் உள்ளே அரனையே நினைந்தான், மூவர்
சொற்சுவை யணிந்தான்; ஆன்றோர் தொகுந்தநன் னூல்கள் வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்; வியன்றமிழ் வியாசன் என்றெம்
உச்சிமேல் வைக்கத்தக்க நாவலன் ஒளிர்க மாதோ !

---

## 44. நாவலர் கண்ணி

நாவலர் என்கையிலே
 நாவெல்லாந் தேனூறும்
சீவ மலரினிலே—கிளியே
 சிவம்வந்து தித்திக்குமே.

அஞ்சாத நெஞ்சுடையார்
 அறநெறி வாழ்வுடையார்
துஞ்சாத தொண்டுடையார்—கிளியே
 சுதந்தர நாவலரே.

ஆழக் கடலைப்போலே
அறிவுக் கடலுடையார்
ஈழத்துச் சிங்கமடீ—கிளியே
இலக்கியச் சுரங்கமடீ.
பைந்தமிழ் வியாச ரவர்—
பசுபதி நேசரவர்
ஐந்தாங் குரவரவர்—கிளியே
ஆறுந்தரம் வாராரோ!

---

## 45. சாமிநாதர்

ராகம் : **காமாஸ்**] [தாளம் : **திஸ்ரரகம்**

அகத்தியர் தருந் தமிழை அன்னைபோல் வளர்த்தனை
சகத்திலே உனைப்போலுண்டோ தாய்மொழிக் குழைத்தவர்
இகத்திலே தமிழ்த்தவம் இயற்றிச் சங்க நூல்களின்
சுகத்திலே குளித்தனை சுவாமிநாத வள்ளலே.

வாடுகின்ற சேய்க்குத்தாய் மருந்துதேடு மாறுபோல்,
வீடுவீடாய்ச் சென்று சென்று வேட்கைகொண்டு நீபழம்
ஏடுதேடித்தேடிநல் இலக்கியங்கள் ஈந்தனை
நீடு வாழி எந்தமிழ் நிலவவாழ் புலவனே.

புலமையைப் புகல்வனே புலவருக் கிறைவனே
புலவருக்கு நீபுரிந்த புண்ணியம் புகழ்வனே
இலகுமுன் ஒழுக்கமும் இறைவனன்புஞ் சொல்வனே
அளவிலாப் புகழ்க்குரியை அப்பசாமி நாதனே.

## 46. வீர சிதம்பரம்

ராகம் : பைரவி] [தாளம் : ஜம்பை

வீரச் சிதம்பரம் பிள்ளை—தமிழ்
வித்தகன் முத்தமிழ் நாட்டில்,
பாரதபக்திக் கனலைத்—தூண்டிப்
பாய்ந்து பணி செய்ய வந்தான்.

தீரன் இவனைப்போல் உண்டோ—எங்கள்
சிங்கம், திலகர் வலக்கை
சோர்வின்றி நாட்டுக் கொடியைப்—பல
தொல்லையைத் தாங்கிப் பிடித்தான்.

எங்கள் சிதம்பரம் என்னில்—நெஞ்சில்
ஏறிடும் வீரம் எழுந்திடும் ஆண்மை
பொங்கிடும் தேசாபி மானம்—அச்சம்
போகும், அடிமைவிலங்கு முறியும்.

வங்கம் ஜயசங்கம் ஊதும்—ஓம்
வந்தே மாதரம் என்று திகழத்
தங்கக் கொடியசைந் தாடும்—கடல்
'சக்தி, சிவம்' எனத் தாவிக் குதிக்கும்.

ராகம் : புன்னாகவராளி] [தாளம் : ஆதி

சுதந்திரக் கப்பல் விடுவோம்—புவித்
துறைகளை அளந்திடுவோம்
சிதம்பரம் என்று சொல்வோம்—வீரஞ்
சிலிர்த்திட முன் செல்லுவோம். (சுத)

நாட்டை எழுப்பி விட்டான்—சங்க
நாதமும் செய்து விட்டான்
வீட்டை நமதென் றறிந்தோம்—அதன்
விடுதலைக்கே தியாகவேள்வி செய்தோம்!

மீசை துடிதுடிக்க அவன்
வீர முரசடித்தே
ஆசையெல்லாம் ஊன்றி—இங்கே
அறச்சமர் தொடுத்து நின்றான். (சுத)

நெஞ்சினில் வீரக்கனல்—ஏறும்
நினைத்திடின் இவன் பெருமை
அஞ்சிடும் பேடியினியார்—சிதம்பரம்
ஆண்மையைத் தூண்டியபின். (சுத)

---

## 47. பாரதியார் பெருமை

வெற்றி முழக்குங்கள் வெண்சங்கம் ஊதுங்கள்
பெற்றதா யின்புகழைப் பேசுங்கள்—சுற்றிலுமே
பாரதத் தாயின் படாம்விரித் தாடுங்கள்
பாரதி பாட்டைப் படித்து.

அச்சத்தை ஓட்டி அடிமைத் தளை போக்கித்
துச்ச நினைவுகளைத் தூரறுத்து—மெச்சவே
ஞாலத்தில் ஓங்கநம் நாட்டை எழுப்பினான்
காலத்தை வென்ற கவி.

எல்லாரும் ஓர்குலமே என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினன்—சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி ; வீரத்
திருவில் வெடித்தெழுந்த தீ.

பூரணமான சுதந்தரம் பெற்றோம்
புதுயுக மனிதராய்ப் பொலிந்தோம்
தாரணி முற்றும் சரிநிகர் ஆனேம்
தலைநிமிர்ந்து ஆண்பெணும் நடந்தோம்
ஆரமு தனைய கலைவளம் செழித்தோம்
அச்சமாம் பேயினை ஒழித்தோம்
பாரதி வீரக் கனிரச விருந்தாம்
பாமணம் பரவிய நாளே.

---

## 48. பாரதி உரு

ராகம் : காபி] [தாளம் : ஆதி

மெல்லிய தங்கக் கொடியிலே—பூத்த
வீரக் கனல் விழி கொண்டவன்
சொல்லின் உணர்ச்சியைத் தூண்டியே—துள்ளித்
துள்ளிக் குதித்திடும் பாடகன்.

அச்சமில்லை எனப் பேசிடும்—வாள்
ஆயுதம் போல்வளர் மீசையான்
துச்ச அடிமைப் பிழையினைத்—தூவென
தூரத்தி யடிக்கும் உரத்தினன்.

பண்டிதர் கொண்ட தமிழினை—நாட்டில்
பாமரரும் பெறச் செய்தனன்
பெண்டிர் அடிமையைத் தீர்த்தனன்—வெறும்
பேச்சினில் மூச்சினைப் போக்கிய

வண்டரை எள்ளி நகைத்தனன்—சக்தி
மந்திரப் பேரி ஒலித்தனன்
தொண்டிவன் செய்ததைச் சொல்லவோ—கவி
தோற்றினன் இங்கே புதுயுகம்.

தீரன் அறிவிற் சிறந்தவன்—புதுத்
தீர்க்க தரிசி வரகவி
வீர சுதந்திர சக்தியே—இவள்
வேடம் புனைந்திங்கு பாடிற்றே
பாரில் அதிசயம் பாரதி—அவன்
பண்களை வேதமென் றோதுவாம்
வாரிதி சூழ்உல கெங்குமே—நீடு
வாழ்க கவிக்குயில் வாழ்கவே.

# 49. உன்னை நினைக்கையிலே

ராகம்: மத்யமாவதி] [தாளம்: ஆதி

உன்னை நினைக்கையிலே—எங்கள்
 உள்ளத்தி லேவீர வெள்ளம் பெருகுது
வன்னக் கவிக் குயிலே—முகம்
 வாடித் தவிக்கும் தமிழுக்கு வான்மழை
என்ன இரங்கி வந்தாய்—இருள்
 இன்னல் பிளந்தினி அச்சம் இல்லை என்றெம்
அன்னை விடுதலைக்கே—பொங்கும்
 ஆவேச மின்னெனத் தாவிவந்தாய் வாழ்க

கண்கள் இரண்டெனவே—வீரக்
 காளைக ளோடிளங் காதல் மயிலெனப்
பெண்கள் தலைநிமிர—ஜய
 பேரிகை கொட்டியிவ் வூரை எழுப்பினை
புண்களை மாற்றிவிட்டாய்—பசும்
 பொன்னும் மணியும் கனலும் பசுந்தமிழ்ப்
பண்கள் பொழிந்ததெல்லாம்—தாய்ப்
 பாலென நாடியிற் பாய்ந்து கலந்தன (உன்)

வெற்றி முரசடிப்போம்—ஜய
 வீர சுதந்தரத் தாயின் மணிக்கொடி
சுற்றி நடமிடுவோம்—நம்மைத்
 துண்டுசெய் மாயத் துயர்களை இன்றுடன்
எற்றி எறிந்திடுவோம்—மாந்தர்
 எல்லாரும் ஓர்குலம் என்னும் சமதர்மம்
பற்றிமுன் னேறிடுவோம்—சக்தி
 பாரதிக் குன்கவி ஆரம் அணிகுவோம் (உன்)

## 50. கனவு பலித்தது

ராகம் : பேஹாக்] [தாளம் : ஆதி

பல்லவி

கனவு பலித்ததம்மா—சுதந்தரக்
கனவு பலித்ததம்மா—எங்கள்
கவிக்குயில் பாரதி கண்ட சுதந்திரக் (கன)

அனுபல்லவி

முனிவர் திலகரும் மோகன காந்தியும்
மூட்டி வளர்த்த தியாகக் கனலினுல் (கன)

சரணம்

தேசமகாகவி பேசிய வீரம்
செந்தமிழ் நாட்டுக்கு ஜீவமின்சாரம்
பேசும் தமிழுக்குப் பேருபகாரம்
பேடிக்கும் வந்தது சாடிடும் தீரம் (கன)

இன்னல் அடிமை இருள் ஓடிப் போச்சுதே
இந்தியா இந்தியர் சொந்த வீடாச்சுதே
அன்னையின் கட்டுகள் விட்டனமுற்றிலும்
ஆனந்தக் காட்சியைக் காணுவோம் சுற்றிலும்

## 51. வ. வே. சு. ஐயர்

தலை சிறந்த தமிழ்மணி ஐயர்
தணலும் வீர சிகாமணி ஐயர்
கலை சிறந்த கவிமணி யான
கம்பன் வாக்கினில் இன்புறும் ஐயர்.

சிலை வடித்த திருத்தகு மேனி
தீரப் பார்வை, திரண்ட புயங்கள்
மலைமுடியென மாண்புறு தோற்றம்
வைரம் பாய்ந்த வலிவுடை ஐயர்.

முனியைப்போல முகப்பொலி வாளர்
முரளி போன்ற குரலினி தாளர்
கனியைப் போன்ற இனியசொல்லாளர்
களைமிகுந்த கதிர்விழி யாளர்.

திருக்குறளைச் சகத்தினுக் கீந்தார்
சிந்தை செய்கை சுதேசத்திற் கீந்தார்
செருக்கில்லாத தலைவர், புலவர்
திலகர், சாவர்க்கர் போன்றவர், தீரர்.

தேசவீரத்தைத் தீயெழத் தூண்டிச்
சீமை ஒற்றர் திகைத்திட வந்தே
நேசநாட்டின் விடுதலைக் காக
நெடுஞ்சமர்க் கடல் நீந்திய தியாகி.

கலைவளருங் குருகுலங் கண்டார்
கண்ணைப் போன்றெனைக் காத்துமதித்தார்.
மலையருவியில் வீழ்ந்து மறைந்தும்
வாழ்கிறார் அவர் என்னுயிர் வாழ்வில்.

## 52. நமது ராஜாஜி

ராகம் : ஹமீர் கல்யாணி] [தாளம் : ஆதி

செந்தமிழ்த் தாய் தந்த தியாகச் சுடரவன்
தேசத்தை ஆளுகின்றான்
துந்துபி முழங்குக தூவுக பொன்மலர்
சுதந்தர பாரதமே ... (செந்)

தூற்றிய பேர்களும் போற்றிப் பணிந்திடும்
தூய மதிப் புலவன்
ஊற்றினைப் போலிங்கே ஒற்றுமைப் பயிரினை
ஓங்க வளர்த்திடுவான் (செந்)

கண்ணன்சொல் கீதையின் புண்ணிய வடிவமாம்
காந்தியின் உள்ள மவன்
விண்ணுயர ராம ராஜ்யத்தை நாட்டிட
வீறுடன் எழுந்து நின்றான்.... (செந்)

உலகெல்லாம் புகழ்ந்திடும் உத்தம ராஜாஜீ
ஒப்பிலாத் தலைவ னவன்
பொலிக பொலிக இந்தப் பொதுநலப் புங்கவன்
பொங்குக மங்களமே!

## 53. செல்வத் தொழில்

செல்வத் தொழில் புரிவோம்—வாரீர்
செந்தமிழ் நாடு செழிந்திடச் செய்குவோம்.
கல்விக்கடல் கடப்போம்—சிற்பம்
காவியம் ஓவியம் கைத்தொழில் யந்திரம்
எல்லாம் பயின்றிடுவோம்—மதி
எட்டுமட்டும் பஞ்ச பூதங்களைக்கொண்டு
வெல்லுந் திறல் படைப்போம்—பல
விஞ்ஞான அற்புதம் கண்டு முன்னேறுவோம்.

தாவும் அருவியிலே—மின்
சாரஞ் சுழற்றிப் பொருள்விளைப்போம் வாரீர்
பூவுள் அகழ்ந்திடுவோம்—செம்பும்
பொன்னும் இரும்பும்யுரேனியமும் கொள்வோம்
ஆவி ரதங்கள் செய்வோம்—பெரும்
அணுசக்தி மோடார், விமானங்களும் செய்வோம்
நாவா யமைத்திடுவோம்—வாரீர்
நாமும் ஓர் வல்லர சாகிடுவோம் ஐயா— (செல்)

வெள்ளி இமயத்திலே—வீர
வெற்றிக் கொடிநட்ட கொற்றவர் சந்ததி
கொள்ளை யடிப்பவர்க்கே—அடிமைக்
கூலியாய்ச் செல்வது கேலியாய்முடியுமே.
வெள்ளமும் காடுமுண்டு—நல்ல
வேலைசெய்யத் தொழிற் சாலையுண்டிங்கனே
சள்ளைபட்டலாமோ—சுத்த
சக்தி துணையுண்டு சன்மார்க்க வாழ்வுண்டு. (செல்)

## 54. புதிய வாழ்வு

அமுத அலைகள் குமுதமிடும்
அழகுக்கலைகள் பொங்கும்
சமூக நன்மைநமது நன்மை
என்னும் தன்மை பொலியும்
புதிய வாழ்வு வாழ்வோம்
பூரணராய் வாழ்வோம்.

சக்தித் தேனும் சாந்தமணமும்
சரியை கிரியை யோக வாழ்வில்
தித்தித் தூறும் பத்தி பெருகும்
சிவமங்களந் துலங்கும் (புதிய)

மூச்செலாம் செயல்களாகி
மோகனக் கனவுலகில்
பேச்செலாம் கவிதை யாகிப்
பேரின்பம் இயற்கையான (புதிய)

இதயத் துடிப்பும் ஏழிசையாய்
எண்ணம் இன்பப் பண்களாகி,
உதயக்குயிலும் கிளியும்போல
உரிமை கொண்ட உள்ளமோங்க (புதிய)

## 55. இன்பமே வாழ்க்கை

இன்பமே வாழ்வின் இயற்கையாம்—ஆம்
என்றிசைப்போம் கலை வண்டுகாள்.
துன்பமெல்லாம் ஒரு சூழ்ச்சியாம்—மனந்
துணிந்தவர்க் குலகமே சொர்க்கமாம்.

நள்ளிரவில் என துள்ளமே—ஒரு
நாதக் கனவிசை வெள்ளமே
புள்ளிசை யாயது பொங்குமே—காலைப்
பூக்களிற் கள்ளெனத் தங்குமே.

காலைக் கதிர்களைக் கொஞ்சுவோம்—பூத்த
கமலத்தின் அழகினைக் கொஞ்சுவோம்.
சோலைக் குயிலிசை கொஞ்சிடும்—அந்தச்
சுதந்தரத் தென்றலைக் கொஞ்சுவோம்.

பெண்ணுக் குயிரான ஆண்மையும்—நல்ல
பேச்சுக் குயிரான கேண்மையும்
கண்ணுக் கொளியெனக் கூடினல்—வாழ்விற்
காதலமுதங்கள் ஓடுமே.

உள்ளமும் உள்ளமும் நாடியே—அங்கே
உள்ளதை உள்ளாரக் கூடினல்
வெள்ளமும் மின்சார வேகமும்—போல
விண்ணின்பம் வந்திங்கு வீறுமே.

இன்பமே எந்நாளும் துன்பில்லை—என்ற
இனிய தமிழ்மறை ஓதுவோம்
அன்பிருந்தால் இந்த மானிடம்—பர
மானந்தக் கற்பக மாகுமே.

## 56. நல்லது

ராகம்: காபி] [தாளம். ஆதி

நல்லது சொல்லிடுவேன்—அதை
நயமுறக் கேட்டிடுவீர்
வெல்வது சத்தியமே—அதை
விரும்புவீர் நித்தியமே.

போட்டி பொறாமைகளும்—வஞ்சப்
போர்களும் மீறுலகில்
தீட்டிய வீரத்தினல்—துஷ்டர்
தீமையை வென்றிடுவீர்.

அச்சப் பிசாசும் இன்றி—சுயநல
ஆசையும் செருக்கு மின்றி
பிச்சை இழிவும் இன்றி—ஐயா
பெருமையாய் நடந்திடுவீர்.

வாலிப வயதினிலே—பாசம்
வழுக்கிடும் உலகினிலே
வேலிரு விழிமாதர்—வலை
வீழ்வது வேதனையே.

காலத்திற் கேற்றபடி—உயர்
கல்வியைக் கற்றிடுவீர்
ஞாலத்திற் கேற்றபடி—நல்ல
நாகரிகம் பயில்வீர்.

வில்லுடன் அம்பினைப்போல்—மலர்
விழியுடன் பார்வையைப்போல்
சொல்லுடன் செய்கையுறப்—பொதுநலத்
தொண்டுகள் செய்திடுவீர்.

## 57. தமிழிசை

ராகம்: சிந்து பைரவி] [தாளம்: ஆதி

தமிழ் இசை என்னும் தடங்கடல் அருவி
குழுதமிட் டெங்கும் குலவுக நலமே.
தேனுடன் பாலும் தேங்கனிச் சாறும்
வானவர் அமுதும் வளர்கநந் தமிழில்.
ஏறிசை யாழின் ஏழிசை யின்பம்
ஊறிய வாழ்க்கை உலகிசை யாமே.
புல்லிய போரும் புன்மதச் சூதும்
கொல்வலி யரக்கர் கொடுமையுந் தீரும்.
அமைதியின் சோலை அருள்வளர் கோயில்
தமிழகம் உலகின் தாயக மாமே.
தென்முனை முதலே திருப்பதி வரையில்
பொன்விளை தமிழகம் பூமியில் விண்ணும்.
வகுப்புக ளின்றி வம்புக ளின்றிப்
பகுப்பற வாழும் பாரினைக் காண்போம்.
ஒருமையில் வாழும் யோகியைப் போலே
உரிமையில் வாழும் ஒருகுல மாவமே

# 58. பொலிப் பாட்டு

ராகம் : புன்னுகவராளி] [தாளம் : ஆதி

பொலிவான பூமியிலே—ஐயா
பொன்னன நெல்விளைப்போம்
மலிவாக உண்டுடுத்தி—மக்கள்
வாழநன்ருய் உழைப்போம்.

வானம் பொழியுதையா—இந்த
மண்ணும் விளையுதையா.
ஞானம் பொழியுதையா—வாழ்
நாளும் பொலியுதையா.

அம்மா பிச்சையெனவே—இனி
அலறும் வறியவர் யார்?
சும்மா இருந்துண்ணும்—செல்வச்
சோம்பேறி யாரினிமேல்?

அரண்டே அடிபணியும்—ஏழை
அடிமைப் பிறவியுண்டோ?
சுரண்டிச் சுரண்டியுண்ணும்—கள்ளத்
துரையின் அமுலும் உண்டோ?

பொதுவான நல்லுலகில்—வர்க்கப்
போராட்டம் ஏனினிமேல்?
புதுவாழ்வு வந்ததுவே—பழம்
புரட்டெல்லாம் போயினவே.

வானக் குடைநிழலில்—மெய்
வருந்தி உழைத்திடுவோம்—
தேனுக்கு வண்டெனவே—அன்பைத்
தேடி ஒன்ருய்க் கூடிடுவோம்.

## 59. ஜயக் கொடி

ராகம் : மாண்டு] [தாளம் : ஆதி

வீர ஜயக்கொடி பாரீர்—அதை
மின்சக்தி கொஞ்சிடும் வானில்,
சூரர் பிடித்த கொடியே—எங்கள்
சுதந்தர நாட்டுத் துவசம்.

கேடுதரும் பகைக் கும்பல்—இதன்
கிட்ட வருவதும் உண்டோ?
ஆடும் மணிக்கொடி கண்டால்—நெஞ்சில்
ஆவேசங் கொள்ளாதார் உண்டோ?

சேரர் செழியர் வளவர்—இங்கே
தெய்வப்புலவர் மணிகள்
தீரர் பராக்ரம சூரர்—நம்
தேசக்கொடியைப் பணிந்தார்

ஆகாத பேய்க்குணமுண்டோ—இனி
அன்னியமாயங்கள் உண்டோ?
மாகாணப்பித்தங்கள் உண்டோ?—எங்கள்
மாதாமணிக்கொடி கண்டால்?

அஞ்சாத நெஞ்சுள்ள சிங்கர்—உள்ளே
அன்புமயமான தொண்டர்
துஞ்சாத பாட்டாளி மக்கள்—இதைத்
தூக்கிப் பிடித்தறங் காப்பார்.

காலப்பறவையிதன்மேல்—கூடு
கட்டித்தன் குஞ்சுகளுடனே
ஞாலத்திற்கே சுபகீதம்—பாடி
நாட்டியமாடுதல் காணீர்.

## 60. கவியின் சித்தி

மாலே வசந்தத்திலே—மண
    மல்லிகை புன்னகைக்கத்—தமிழ்ச்
சோலே யழகினிலே—ஒரு
    சொற்பனம்போல் நடந்தேன்.

வாடாத நாண்மலரால்—புதுப்புது
    மாலேகளைத் தொடுத்தேன்.
தேடாத வண்டினங்கள்—அதில்
    தேனுண்டு சென்றனவே.

காசினி வேந்தரெல்லாம்—பூங்
    காவை விலகிச் சென்றார்—நான்
ஆசையுடன் அழைத்தும்—என்
    அன்பை அறியவில்லே.

ஓரக்கண்பார்த்துச் சென்றாள்—செருக்
    கோங்கும் புகழ்ச்சிறுக்கி.
ஈரக்கண்ணைக் கசக்கி—நான்
    ஏங்கித் தனித்திருந்தேன்.

வேளேயும் வந்ததம்மா—வடி
    வேலனும் வந்துவிட்டான்—பல
நாளேக் கனவுகளும்—ஒரு
    நாளிற் பலித்தனவே.

என்னிசை மாலையெல்லாம்—முருகன்
இன்பமுடன் அணிந்தே
பொன்னிசைக்கும் அரிய—அருட்
புன்னகை பூத்து நின்றாள்.

துன்பமெல்லாந் துடைத்தான்—என்னைத்
தூக்கி யணைத்துக்கொண்டான்
அன்பு மயத்தினிலே—நானும்
அவன் மயமானேன்.

புகழி தேடிவந்தாள்—இளம்
பொன்னியுந் தேடிவந்தாள்
இகழ்ந்த மாந்தர்களும்—கவி
எங்கெனத் தேடிவந்தார்.

உருவை மறைத்துவிட்டேன்—இங்கே
உள்ளதை யார் அறிவார்?
அருவினில் இருந்தே—நான்
ஆகாசப் பேச்சொலித்தேன்.

ஆரெவன் எங்கெனவே—என்னை
ஆராய வேண்டுகின்றார்
பாரத சக்தியிலே—நிதம்
பார்த்தறிந்தால் அறிவார்.

O-,1MSB,1
N51

## 61. வெற்றிப் பாட்டு

வெற்றி வெற்றி வெற்றி என்று பாடுவோம்
வீறுபெற்ற தோழர் ஒன்று கூடுவோம்
ஒற்றுமை முரசொலித்து முன்செல்வோம்
உலகுக்கெல்லாம் யோகசித்தி சொல்லுவோம்.

ஆண்மைகொண்டு கேண்மைகொண்டு
அன்னையைப் பெருமைசெய்ய
மாண்மைகொண்ட புதியவீரர்
வளமைகொண்ட தொண்டுசெய்ய (வெ)

கண்ணென உரிமையைக் காப்பாற்றுவோம்
கையெனப் பிறர்க்குதவி ஆற்றுவோம்
பொன்னெனப் பொதுநலத்தைப் போற்றுவோம்
பூமிகோயில் சாமி மாந்தர் கூட்டமே.

அறிவுந் திருவும் அறமும் ஓங்க
அச்சம்பொய் களவு நீங்க
திறமைபெருகி இம்மை மறுமைச்
செல்வமெல்லாம் மல்கநாளும் (வெ)

பொருள்செழித்த தொழில்வளத்தைப் போற்று
வோம்
புகழ்செழிந்த கலைகளைமுன் னேற்றுவோம்
அருள்செழிந்த அமரகங்கை ஆடுவோம்
ஆத்மசக்தி யால் எமனைச் சாடுவோம். (வெ)

நாடு வாழ வீடுவாழ
நன்மை வா[illegible]ன்மைவாழ
நீடுவாழத் தமிழர் கூட்டம்
நிக[illegible]ரண மனிதர் வாழ (வெ)

தமிழ்க் கனல் முற்றும்.

LIBRARY
106652

# கவி யோகியின்
# அமரக் கனிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பாரத சக்தி மகா காவியம் (ஐந்து காண்டங்களும்) இந்நூல் உலகப் பெரியார் வரலாறுகள், எல்லாச் சமய—சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள், சுத்தயோக சித்தி ரகசியங்கள், கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனாக வாழும் வழிகள் அடங்கிய புதிய காவியச் சோலை. 1000 பக்கங்கள். | 15 | 0 |
| 2. | யோக சித்தி (மூலமும் உரையும்) ஆசிரியர், கல்வி, சுகாதாரம், அரசியல், சமுதாய சீர்திருத்தம், கிராம சேவை, பத்திரிகை, காவியம், யோகம் முதலிய பல துறைகளில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களெல்லாம் இந்நூலில் அடங்கியுள்ளன. | 3 | 0 |
| 3. | ஆத்ம சோதனை—சுத்தானந்தர் மனித சமுதாயத்திற்கு அளித்த ஆத்மானுபவப் பொக்கிஷம் | 7 | 8 |
| 4. | திருநூல் | 1 | 12 |
| 5. | நவரஸ நடனாஞ்ஜலி | 2 | 0 |
| 6. | கீர்த்தனாஞ்ஜலி (556 இசைப் பாடல்கள்) | 3 | 8 |
| 7. | கவிக் கனவுகள் (திருக் காட்சியுடன்) | 1 | 8 |
| 8. | புதுயுகப் பாட்டு (105 சுதந்தர உலக கீதங்கள்) | 1 | 8 |
| 9. | ஏழை படும் பாடு (Les Miserables) | 5 | 0 |
| 10. | பகவத் கீதை (தெளிந்த தமிழுரை—அச்சில்) | 1 | 4 |
| 11. | தமிழ்க் கனல் | 1 | 0 |
| 12. | திருக்குறளின்பம் | 3 | 8 |
| 13. | அருட் செல்வம் (நம் வேதம் 1030 பாசுரங்கள்) | 2 | 0 |

## புதுயுக நிலையம்
பாரதி மில்ஸ், புதுச்சேரி

## சுத்த நிலையம்
வான்கார்ட் மாளிகை, 2-வது பீச் லைன், சென்னை

# YOGI SHUDDHANANDA BHARATI

## (A STUDY)

BY

**Dewan Bahadur K. S. Ramaswami Sastriar**

This is a brilliant study of the many-sided genius and personality of Yogi Shuddhananda Bharathiar, by a great savant. The book is replete with chosen gems from the various works of the seer-poet. It is a book to be read and re-read by all. Rs. **3.**

# THE GOSPEL OF PERFECT LIFE

## (Yogi Shuddhananda Bharati)

A chosen garland of practical wisdom and spiritual experiences rich with the truth and rhythmic self-expressions of a long ingathered life. A valuable guide to seekers of godly perfection in all details of actual life—spiritual, moral, cultural, economic, social, political and æsthetic. Every line is a sparkling gem of truth that guides the seeker on! Rs. **3.**

*— Can be had of: —*

**PUDUYUGA NILAYAM**
Bharati Mills, PONDICHERRY

**SHUDDHA NILAYAM**
Vanguard House,
2nd Line Beach, MADRAS-1

PRINTED AT

THE SUNDAY TIMES PRESS,

MADRAS-6.